# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 11 திங்கட்கிழமை (27-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:307


# தமிழர் தாயகம் எங்கும் நேற்று திலீபனுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி

## நல்லூர் பிரதான நிகழ்வில் பெரும் எண்ணிக்கையானோர் திரண்டனர்

யாழ்ப்பாணம்,செப்.27

தமிழ் மக்களின் விடிவுக்காக உண்ணாநோன்பிருந்து தனது இன்னுயிரைத் தியாகம் செய்த தியாகி லெப்.கேணல் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு தின இறுதிநாள் நிகழ்வுகள் நேற்றுத் தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் மிகுந்த உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் திலீபன் நினைவு தினத்தையொட்டி விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

முக்கிய வீதிகள், சந்திகள் தோறும் எழுச்சிக் கீதங்கள் ஒலித்துக்கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

திலீபனின் நினைவுப் பந்தல்கள் தோறும் மக்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

பிரதான நிகழ்வுகள் கோட்ட ரீதியாக இடம் பெற்றன.

குடாநாட்டின் பிரதான நிகழ்வுகள் நேற்றுக் காலை நல்லூரில் உள்ள திலீபனின் நினைவுத் தூபியில் ஆரம்பமாகின. முற்பகல் 9.30 மணியளவில் நிகழ்வு தொடங்கியதும் ஈகச் சுடரினை மாவீரர்களான மேஜர் கண்ணன், லெப். குமுதா ஆகியோரின் தாயார் திருமதி வேதநாயகி சண்முகலிங்கம், எழுத்தாளர் சு.யேசுதாசன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து திலீபனின் நினைவுத் தூபிக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தொடர்ந்து நல்லூர் இந்துத் தமிழ்ப் பெண்கள் பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்திய இசை முழங்க நினைவுதின ஊர்வலம் ஆரம்பமானது. பான்ட் இசையைத் தொடர்ந்து திலீபனின் திருவுருவப் படம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. அதற்குப் பின்னால் பாடசாலை மாணவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளானோர் சென்றனர். (15ஆம் பக்கம் பார்க்க)

# அமைதி முயற்சிகளில் ஜனாதிபதியின் இறுக்கப்போக்கு மேலும் தீவிரமாகும்

## வெளிநாட்டு விஜயத்தால் அவர் அதீத உற்சாகம்; அவரது நிலைப்பாட்டுக்கு அங்கு அதிக வரவேற்பாம்

கொழும்பு,செப்ரெம்பர்27

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் நடவடிக்கைகளில் ஜனாதிபதி சந்திரி'கா குமாரதுங்க மேலும் இறுக்கமான போக்கை இனிமேல் கடைப்பிடிப்பார். சிங்களப் பேரினவாதிகள் பக்கம் சாய்ந்ததாக அவரது தீவிரப் போக்கு இருக்கும். விட்டுக்கொடுப்புக்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு தாம் அண்மையில் மேற்கொண்ட விஜயங்களால் இவ்விடயங்களில் அதிகம் உற்சாகம் அடைந்துள்ள அவர் அமைதி முயற்சிகளில் தமது நிலைப்பாட்டுக்கு சர்வதேச ரீதியில் அதிக வரவேற்பு உள்ளது என்று கருதுகின்றார். எனவே சமாதான முயற்சிகளில் அவரது இறுக்கப்போக்கு மேலும் தீவிரமடையுமே தவிர இப்போதைக்குத் தளர்வடையாது.

இவ்வாறு முக்கிய இராஜதந்திர வட்டாரங்கள் உயர் மட்டத்தில் புலிகளுக்கு அறிவுறுத்தியிருக்கின்றன என்று அறிய வருகின்றது. (15ஆம் பக்கம் பார்க்க)

## அனுமதியின்றி அமைச்சர்கள் வெளிநாடு செல்லத் தடை

கொழும்பு,செப்.27

வெளிவிவகார அமைச்சின் அனுமதியின்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைச்சர்கள் வெளிநாடு சென்று தமது அமைப்புக்கள் சார்பாக பேச்சு நடத்தி ஒப்பந்தங்கள் செய்வது முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை சகல அமைச்சர்களுக்கும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதியால் அனுப்பப்பட்டுள்ளது.

ஜே.வி.பி. அமைச்சர்கள் உட்பட பல அமைச்சர்கள் வெளிவிவகார அமைச்சின் அனுமதியின்றி வெளிநாடுகளுக்குச் செல்வது தெரிய வந்துள்ளதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-க)



தியாகதீபம் திலீபனின் 17ஆம் ஆண்டு மற்றும் கேணல் சங்கரின் 3ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி இருவருடைய உருவப்படங்களுக்கும் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் நேற்று வன்னியில் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திய காட்சிகள்.

## முதலில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு அதன்பிறகே ஆலோசனைச் சபை

### ஜனாதிபதிக்கு ரணில் கடிதம்

கொழும்பு,செப்.27

"இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் அடிப்படையில் முதலில் புலிகளுடன் நேரடியாகப் பேச்சை ஆரம்பியுங்கள். பேச்சு நடைபெறும்போது எழும் உப விவகாரங்கள் தொடர்பில்தான் சமாதானம், நல்லிணக்கம் என்பவற்றிற்கான தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலின் பொருத்தம் இப்போதல்ல."

- இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு எழுதியுள்ள பதில் கடிதத்திலேயே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசாமல் அதைத் தவிர்த்து சகல அரசியல் கட்சிப் (16ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சர்வதேச சமூகம் தீர்க்கமாக பங்காற்றவேண்டும்

### சுவிஸ் தூதரிடம் கூட்டமைப்பு எம்.பிக்கள் வலியுறுத்து

கொழும்பு,செப்.27

அரசு,புலிகள் இரு தரப்பினரும் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முக்கிய - திட்டவட்டமான - பங்களிப்பை சர்வதேச சமூகம் மேற்கொள்ளவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுவிஸ் தூதரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று கூட்டமைப்பு எம்.பிக்கள் சுவிஸ் தூதுவர் பேர்னாடினோ ரெகாரோனியை அவரது தூதரகத்தில் சந்தித்துப் (16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கனடா 'பொங்கு தமிழ்' நிகழ்வில் ஈழத்தமிழர்கள் உரிமைக்கோஷம்

றொறன்ரோ,செப்.27

கனடாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் வரலாறு காணாத அளவு ஈழத்தமிழர்கள் கலந்துகொண்டனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. 75 ஆயிரம் பேர் வரை இந்த நிகழ்வில கலந்துகொண்டனர் என்று கனேடியன் தமிழ் வானொலி (சி.ரி.ஆர்.) தெரிவித்தது.

ஒன்றாரியோ நாடாளுமன்றத் திடலில் நிகழ்வுகள் நடந்தன. புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவரும் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினருமான ஜக்லேடன் மற்றும் றொறன்ரோவில் பிறந்து வளர்ந்த அரசியல்வாதியான மிகல்ல பெரு ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இந்த நிகழ்வு கனேடியத் தமிழர்களின் அரசியல் பலத்தை உலகுக்கு உணர்த்தியுள்ளது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். கலந்துகொண்ட மக்களின் எண்ணிக்கை எல்லை தாண்டியதால் நாடாளுமன்றைச் சுற்றியுள்ள வீதிகள், பின்புறமாக அமைந்திருந்த மைதானம் மற்றும் அருகிலுள்ள பல்கலைக்கழக வளாகம் என்பவற்றிலும் மக்கள் நின்றிருந்தனர்.

'பொங்குதமிழ்' நிகழ்வில் கலந்துகொண்ட மக்களின் வருகையால் நகரின் வழமையான பொதுப் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்தன. றொறன்ரோ போக்குவரத்துச் சபை தனது வழமையான நேர அட்டவணையை மாற்றி விரைவாக நிலக்கீழ் ரயில் வசதிகளைச் செய்திருந்தது. இருந்தபோதிலும் ஒரு கட்டத்தில் நாடாளுமன்றத்திற்கு அருகேயுள்ள ரயில் நிலையங்

படங்கள் 11ஆம் பக்கத்தில்!

களில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக ரயில்கள் மேற்படி நிலையங்களில் மக்களை இறக்காமல், அடுத்தடுத்த ரயில் நிலையங்களில அவர்களை இறக்கிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமான நேற்றைய பிரமாண்ட நிகழ்ச்சிகள் தேசியத் தலைவர் பிரபாகரனின் பெரியதொரு உருவப்படத்தின் கீழான மேடையில் நடைபெற்றன.

மாணவர்கள் உணர்ச்சிகரமான எழுச்சிப் பாடல்களைப் பாடினர். எதிரிகளின் இனவாதப் பிரசாரங்களையெல்லாம் முறியடித்துவிடவேண்டும் என்ற உத்வேகம் காரணமாக பல தள்ளாத வயது முதியவர்கள் கூட இந்த நிகழ்வில் வந்து கலந்துகொண்டமை அனைவரையும் உணர்ச்சி கொள்ளவைக்கும் ஒரு நிகழ்வாக அமைந்தது என்று செய்திகள் கூறுகின்றன.

கனேடிய தமிழ் மாணவர் ஒன்றியம் நிகழ்விற்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தது. ஒன்றியத்தின் உறுப்பினர்கள், ஆயிரக் கணக்கானவர்கள் மஞ்சள் நிற 'ரி-சேர்ட்'களை அணிந்து நின்றவாறு நிகழ்வை ஒழுங்கு படுத்தினர்.

★ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபின் அடிப்படையில் இலங்கை அரசு எந்தவித நிபந்தனையுமின்றி பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்.

★ இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் சமாதானப் பேச்சை முன்னெடுக்க இலங்கை அரசுக்கு கனேடிய அரசு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

★ இலங்கை சமாதான முயற்சிக்குத் தனது ஆதரவை நடைமுறையில் வெளிப்படுத்தும் வகையில் அரசு - புலிகள் பேச்சைக் கனடாவில் நடத்த கனேடிய் அரசு முன்வரவேண்டும்.

★ சிங்கள அரசுகளால் புறக்கணிக்கப்பட்ட தமிழர்களின் எதிர்பார்ப்புகளையும் நேர்மையான அபிலாஷைகளையும் சர்வதே சமூகம் விளங்கிக்கொண்டு அவற்றை ஊக்கப்படுத்த வேண்டும்.

- ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்தப் 'பொங்குதமிழ்' நிகழ்வு இடம்பெற்றது. (ஐ-க-13)

## மருதனார்மடத்தில் மணிக்கூண்டு கோபுரம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.27-

மருதனார்மடச் சந்தியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மணிக்கூண்டுக் கோபுரம் இன்று முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை உள்ள சுபநேரத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் றொட்டேரியன் ஆளுநர் டி.எம். சுவாமிநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

கோபுரத்திறப்பு விழாவையொட்டி கட்டுரைத் தொகுப்பு ஒன்று வெளியிடப்பட உள்ளது. அத்துடன் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கு உடைகள் வழங்கப்படவுள்ளன. (ஐ-201)

# தமிழர்கள் வழங்கியுள்ள அரிய வாய்ப்பை சரியாகப் பயன்படுத்துமா சிங்கள அரசு?

## திலீபன் நினைவுதின நிகழ்வில் இளம்பரிதி கேள்வி

யாழ்ப்பாணம்,செப்.27

தமிழர்கள் கொடுத்திருக்கின்ற அரிய சந்தர்ப்பத்தை - நல்லதொரு வாய்ப்பை ஏற்றுக்கொண்டு - கடந்த காலத்தில் விட்ட வரலாற்றுத் தவறுகளை உணர்ந்துகொண்டு, வரலாற்றுச் சரிப்படுத்தல் ஒன்றைச் செய்வதற்கு ஸ்ரீலங்கா அரசு முன்வரவேண்டும் - முன்வருமா?

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

நேற்றுக்காலை நல்லூர் ஆலய முன்றிலில் நடைபெற்ற தியாகி திலீபன் நினைவுதின இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

திலீபனின் வீரவரலாறுகள் மற்றும் தற்கால அரசியல் நிலைவரங்கள் தொடர்பாக நீண்டதொரு உரையினை - மிகவும் ஆவேசத்துடன் ஆற்றினார் இளம்பரிதி.

அவரது அந்த உரையின் ஒரு பகுதி வருமாறு:-

ஸ்ரீலங்கா அரசுக்கு இது வாய்ப்பான காலப்பகுதி. தமிழர்கள் கொடுத்திருக்கின்ற இந்த அரிய வாய்ப்பைச் சரியாகப்பயன்படுத்திக் கொள்வதற்கு அரசு முன்வரவேண்டும்.

அன்று திலீபனது கோரிக்கைகளுக்கு இலங்கை, இந்திய அரசுகள் மதிப்புக்கொடுத்திருந்தால், அவனது உறுதியான சுதந்திர வேட்கை தீர்ந்திருக்கும். ஆனால், திலீபனின் கோரிக்கையை ஏற்பதற்கு சதிகாரர்கள் தயாராக இருக்கவில்லை.

இராணுவ பலத்தால் எங்களை ஆக்கிரமித்துக்கொண்டிருந்த - அரசியல் ரீதியாக உலுப்பிக் கொண்டிருந்த - சக்திகளுக்கு எதிராக வேறு வழியில்லாமல் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தோம்.

தலைவருடைய வழியினைப் பின்பற்றிய திலீபனும் ஓர் உயர்ந்த தியாகியாகவே இன்று எமது மக்களுடைய மனதிலேயே வாழ்கின்றான்.

உலகத்திலே மனிதத்தினை நேசிக்கின்ற - மனித வாழ்வை மதிக்கின்ற ஒவ்வொருவருமே பற்றிக் கொண்டிருக்கின்ற ஓர் உயிர்ப்பான பெயர்தான் திலீபன்.

அன்று இரு அரசுகளும் மதிப்புக் கொடுக்காதமையினால் தான் - எமது உரிமைகளை ஏற்க' மறுத்தமையினால்தான் - நாம் ஒரு பலமான இராணுவ பலத்தினைக் கட்டி எழுப்பினோம். அரசியல் பலத்தைக் கட்டியெழுப்பினோம். தமிழீழ நிர்வாகப் பொருளாதார அமைப்புக்களை வளர்த்தெடுத்தோம்.

இந்தச் சமபலம் என்ற நிலைமை இங்கு ஏற்பட்டபோதுதான் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது.

இரண்டு நாடுகளிற்கு இடையிலேதான் யுத்தநிறுத்தம் நடக்கும், பேச்சு நடக்கும். ஆனால், புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் எந்த வகையில் யுத்த நிறுத்தம், எந்த அடிப்படையிலே பேச்சு எனக் கேள்வியை எழுப்பினார் முன்பு பாதுகாப்பு அமைச்சராக இருந்த அத்துலத்முதலி.

ஆனால், இன்று சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டிருக்கின்றது.

நாங்கள் தனித்துவமான நிலையைக் கொண்டிருக்கின்றோம் என்பதனால்தான் இன்று யுத்த நிறுத்தம் சாத்தியமாகியது.

மக்களின் உறுதிமிக்கப் பங்களிப்பினாலும் எமது உதிரம் நிறைந்த தியாக உணர்வினாலும், சரித்திரம்மிக்க சம்பவங்களினாலும் தான் இன்று இவை நடந்திருக்கின்றன - என்றார் இளம்பரிதி. (ஐ-4-5-6-7-13-86)

### ஆறுமுகன் கீழ் இருந்த அமைச்சில்

# விருந்தினர் விடுதி விற்பனையில் சுமார் ஒரு கோடி ரூபா மோசடி!

## விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது

கொழும்பு,செப்.27

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான ஆடம்பர விடுதி விற்பனை தொடர்பாக ஒரு கோடி ரூபா மோசடி அம்பலத்திற்கு வந்துள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒரு கோடி எழுபது லட்சம் ரூபா பெறுமதியான இந்த ஆடம்பர விடுதியை முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் ஆதரவாளர் ஒருவர் எழுபது லட்சம் கொடுத்து சுருட்டிக்கொண்டார் என்ற தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

இந்த மோசடி தொடர்பாக மோசடிப் பிரிவு குற்றப்புலனாய்வுப் பொலீஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் முன்னைய அரசில் வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக இருந்தபோது இந்த அமைச்சின் கீழ்வரும் கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனப் படுத்துவதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபையால் ஐம்பது லட்சம் ரூபா அப்போது செலவிடப்பட்டுள்ளது. அதனால் அதன் பெறுமதி ஒரு கோடி எழுபது லட்சம் ரூபாவாக உயர்ந்தது.

சபையின் பிரதான அதிகாரிகளுள் ஒருவரான இந்த நபர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இந்த உல்லாச விடுதியை வீடமைப்பு அதிகார சபையுடன் தொடர்புடைய ஒரு நிறுவனத்துக்கு அறுபது லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யவைத்தார்.

அதன். பின்னர் அந்த நிறுவனத்திடமிருந்து இந்த உல்லாச விடுதியை எழுபது லட்சம் ரூபா கொடுத்துத் தனது பெயருக்கு மாற்றினராம் அந்த நபர்.

அதேவேளை, அறுபது லட்சம் ரூபாவுக்கு வாங்கியதை எழுபது லட்சம் ரூபாவுக்கு விற்றதால் தேசிய வீடமைப்பு அதிகார சபைகது இலாபமாக பத்து லட்சம் ரூபா கிடைத்துள்ளது என்றும் அவர் கணக்குக் காட்டியுள்ளராம்.

இந்த விற்பனை மற்றம் உரிமை மாற்றம் தொடர்பாக வழமையான நடைமுறைகள் எதுவும் கடைப்பிடிக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

இந்த வகையில் ஒரு கோடி 70 லட்சம் ரூபா பெறுமதியான இந்த விடுதியை எழுபது லட்சம் ரூபா விலை நிர்ணயித்து அதனை உரிமையாக்கிக் கொண்டதில் ஒரு கோடி ரூபா வரை மோசடி செய்யப்பட்டுள்ள விடயம் இப்பொழுது வெளியே கசிந்துள்ளதாம்.

இம்மோசடி தொடர்பாக இப்பொழுது வீடமைப்பு அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குற்றப்புலனாய்வுப் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார் என்றும் தெரிகின்றது.

இதனைத் தொடர்ந்து இரகசியப் பொலீஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனராம்.

ஆனால், இவ்வளவு பெரிய மோசடி தனது அமைச்சில் இடம்பெற்றமை ஆரம்பத்திலிருநதே அமைச்சர் ஆறுமுகன தொண்டமானுக்குத் தெரியாது என்ற உண்மையும் இப்போது வெளிப்பட்டுள்ளதாம். (ஐ-க)

## விளம்பரத்தில் தவறு

நேற்றைய உதயனின்/பத்தாம் பக்கத்தில் வெளியான திருமதி மனோரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் அம்மாவின் 16 ஆம் நாள் நினைவலைகள் விளம்பரத்தில் -

நாயன்மார்கட்டிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக ~ என்ற வசனத் தொடர்கள் விடுபட்டுப் போயின.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நேர்ந்த இந்தத் தவறினால் விளம்பரதாரருக்கு உண்டான மனத்தாக்கங்களுக்கும் சங்கடங்களுக்கும் வருந்துகிறோம்.

- ஆசிரியர்.

# யாழ்.நகரில் நெரிசலைத் தவிர்க்க விசேட பொலீஸ் குழு பணியில்

யாழ்பாணம்,செப்.27

யாழ். நகரப் பகுதியில் போக்குவரத்துக்கு இடைஞ்சல்கள் ஏற்படுத்தப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் விசேட பொலீஸ் குழு ஒன்று அடுத்தவாரம்முதல் ஈடுபடவுள்ளது.

யாழ். நீதிமன்றத்தில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற போக்குவரத்து சீராக்கல் தொடர்பான கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி பொலீஸார் இந்த நடவடிக்கையை எடுக்கவிருக்கின்றனர்.

யாழ். நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் மற்றும் தனியார் பஸ், ஓட்டோ, பாரவூர்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை ஆகியவற்றின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

நகரப் பகுதியில் போக்குவரத்தை சீராக்க பத்து பொலீஸார் கொண்ட குழு, மாநகரசபை அலுவலர்களின் உதவியுடன் இந்த நடவடிக்கையில் ஈடுபடும்.

நகரப்பகுதியில் வீதிக்கு நெருக்கமாக - போக்குவரத்துக்கு இடைஞ்சலாக - அமைந்துள்ள நடைபாதைக் கடைகள் அங்காடிகள் அகற்றப்படவிருக்கின்றன. அத்துடன், நகர வதிகளில் சமாந்தரமாக சைக்கிளில் செல்வோர் கைது செய்யப்படுவர்.

இன்று முதல் பத்துத்தினங்கள் இந்தப் பொலீஸ்குழு நகரப் பகுதியில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அதன்பின் தொடர்ந்து ரோந்துப் பணிகளைப் பொலீஸார் மேற்கொள்வர். (ஐ-3)

# 'இசைச்சிட்டு' நினைவு அரங்கு திறப்புவிழா

வடமராட்சி கிழக்கு,செப்.27

மாவீரர் லெப்டினன்ட் இசைச்சிட்டுவின் (பா.சுந்தரேஸ்வரி) ஆறாம் ஆண்டு நினைவு தினமும் இசைச்சிட்டு நினைவு அரங்கத்திறப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த வைபவத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இறுதியாக வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியும் நடைபெறும். (ஐ-13-182)

# தியாகி திலீபனின் நினைவுநாள் காட்சிகள்...



பொதுச்சுடர் ஏற்றும் - மாவீரர் ஒருவரின் தாய்



தியாகி திலீபனின் திருவுருவப் படம் ஊர்வலமாக...



ஈகச்சுடர் ஏற்றும் மதத் தலைவர்கள்...



நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களில் ஒரு பகுதியினர்.

நல்லூரில்...




தியாகி திலீபன் உண்ணா நோன்பு இருந்து உயிர்நீத்த இடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நினைவுக்கல்லை சி.இளம்பரிதி திரைநீக்கம் செய்யும் காட்சி.




மலரஞ்சலி செலுத்தும் சிறுவன் ஒருவன்.



அகவணக்கத்தின்போது



அஞ்சலி செலுத்தும் பொதுமக்கள்



அடையாள உண்ணா நோன்பில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்.

படங்கள்:தீபன்









தியாக தீபம் திலீபனின் 17ஆவது நினைவு தின இறுதி நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள். வடமராட்சி அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய வீதியில் நடைபெற்ற நிகழ்வில் வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயா, தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றுவதையும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.கஜேந்திரகுமார் சிறப்புரையாற்றுவதையும் திலீபனின் உருவப்படத்திற்கு மக்கள் மலரஞ்சலி செலுத்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் எஸ்.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்.)





மாதகல் வலய செயற்பாட்டு குழுவினால் அமைக்கப்பட்ட தியாகிதிலீபனின் நினைவாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் திலீபனின் திருவுருவப்படத்திற்கு மாதகல் இளவாலை வலய பொறுப்பாளர் ரமேஸ், செயற்பாட்டுக் குழுவினர், மாணவர்கள் ஆகியோர் மலரஞ்சலி செலுத்துவதைக் காணலாம்.

(படங்கள்:மாதகல் செய்தியாளர்)

# காலபோக நெல்விதைப்பை வியாழக்கிழமை ஆரம்பிக்குக

## மானிப்பாய் சம்மேளனம் விவசாயிகளிடம் கோரிக்கை

வலி.தென்மேற்கு,செப்.27

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 2004-2005 ஆம் வருட காலபோக நெற்செய்கைக்கான நெல் விதைப்பு எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்படவேண்டும் என்று விவசாயிகளைக் கோரும் தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தின் காலபோக நெல் விதைப்பு பற்றிய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் சி.பொ.மா.க. முதலியார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உடுவில் கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் செ.சோதிநாதன், கீரிமலை கமநல சேவை நிலைய விவசாய போதனாசிரியர் திருமதி பரமேஸ்வரி மணிவர்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காலபோக நெல் விதைப்பின் முதல் அறுவடையை 15.02.2005 ஆம் திகதியளவில் மேற்கொள்ள முடியும் என்றும் இந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

நெல் விதைப்பு ஆரம்பிக்கப்படுவதை அடுத்து இப்பகுதிகளில் மக்கள் தங்கள் ஆடுமாடு போன்ற கால் நடைகளைக் கட்டி வளர்க்கவேண்டும் என்றும் -

கட்டாக்காலிகளாகத் திரியும் ஆடு, மாடுகள் பிடிக்கப்படும் என்றும் - இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கட்டாக்காலிகளைப் பிடிப்பதற்காக மூன்று பிடிகாரர்களும் இக்கூட்டத்தில் நியமனம் செய்யப்பட்டனர்.

நெல் விதைப்புத் தொடக்கம் அறுவடைக் காலம் வரை மந்தைப் பட்டிகளை வயல் காணிகளுக்கு ஊடாகக் கொண்டுசெல்வது தவிர்க்கப்படவேண்டும் என்றும் - விதைப்பு ஆரம்பித்ததும் வயற்காணிகளுக்கு ஊடாக உழவு இயந்திரங்களைக் கொண்டுசெல்வது நிறுத்தப்பட வேண்டும் என்றும் - இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை - நெல் விதைப்பை முன்னிட்டு வழுக்கையாற்றுப் படுக்கையிலும் அதன் கிளைவாய்க்கால்களிலும் புற்கத்தைகளையும் பொலித்தீன் பைகளையும், வேறுகழிவுப் பொருள்களையும் போடவேண்டாம் எனக்கோரும் தீர்மானமும் இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (எ-135)


## மாவீரர் தினத்தை முன்னிட்டு

இணுவில் கிழக்கு, கலாஜோதி சனசமூக நிலையம் நடத்தும்

### நாடகப் போட்டி - 2004

- திறந்த போட்டியாக நடத்தப்படும் இப்போட்டிக்குக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.
- 30-35 நிமிடம் கொண்டதாக நாடகம் அமைதல் வேண்டும்.
- நவம்பர் மாத முற்பகுதியில் போட்டி நடைபெறும்.
- போட்டித்திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
- நாடகத்துக்கான கருப்பொருள் பின்வரும் விடயங்களில் ஏதேனும் ஒன்றை மையமாகக் கொண்டு அமைதல் வேண்டும்.
  - I மாவீரர் தியாகம்
  - II தேசவிடுதலைக்கு உரமிடுவோம்
  - III சமாதானம் மலருமா?

* விண்ணப்ப முடிவு திகதி: **10.10.2004**

விண்ணப்பங்களை நேரடியாகவோ, தபால்மூலமாகவோ அனுப்பமுடியும்.

அனுப்பவேண்டிய முகவரி:

**கலாஜோதி ச.ச. நிலையம்**

தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.

விளம்பர அன்பளிப்பு:

**சாந்தினி தொலைத்தொடர்பகம் & குளிருவி**

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள், இன்ரநெற் அழைப்புகள், குறைந்த கட்டணத்தில் விரைவான சேவை மற்றும் விமான சேவை, பஸ் சேவை, போட்டோ கொப்பி, இன்ரநெற், Kit, Mobitel Cards வசதிகளுக்கு, 208, K.K.S. றோட், இணுவில் (ஆஸ்பத்திரிக்கு முன்பாக).

T.P.: 021 222 3390, 021 222 3633

(24-14-44-26) (சி-37860)


## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 04 - 11 - 1928



மறைவு 28 - 08 - 2004

### திருமதி சுந்தரம் வள்ளிப்பிள்ளை

28-08-2004 அன்று சிவபதம் எய்திய எமது குடும்பத் தலைவியின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (27-09-2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்வில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அன்றையதினம் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவற்காடு, அச்சுவேலி. - குடும்பத்தினர்.

(சி-36881) (26-14-44)

## தென்னங்கன்றுகள் விநியோகம்

வட்டுக்கோட்டை,செப்.27

தென்னைப் பயிர்செய்கைச் சபையினால் நல்லினத் தென்னங்கன்றுகள் நியாயவிலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

பருவகால மழையினை அடுத்து மூன்று வருடத்தில் பயன்தரக்கூடிய மற்றும் ஐந்து வருடத்தில் பயன்தரக்கூடிய நல்லினத் தென்னங்கன்றுகளே விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தென்னங்கன்றுகளைப் பெறவிரும்புவோர் நல்லூர் கமநலசேவை நிலையக் கட்டடத்தில் உள்ள தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று யாழ்.மாவட்டத் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் தெரிவித்துள்ளார். (10-161)

## மதிப்பீட்டுக் கூட்டம்.

தென்மராட்சி,செப்.27

தென்மராட்சி கல்வி வலயத்தில் மாதிரிப் பாடசாலைகளாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் செயற்திட்ட மதிப்பீட்டுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலயத்தைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோட்டக்கல்வி அலுவலர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலைகளின் அதிபர், ஆசிரிய வள முகாமையாளர் ஆகியோரை இக்கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-117)

## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

**18ஆம் மாதம்**

மலர்வு 08 - 06 - 1940



உதிர்வு 07 - 04 - 2003

அமரர்

**கந்தையா செல்வரட்ணம்**

(B.Sc. Hons)

**முதலாம் ஆண்டு**

மலர்வு 08 - 01 - 1932



உதிர்வு 09 - 10 - 2003

அமரர்

**கந்தையா ஆறுமுகம்**

[B.Sc. Eng, MIEE, (Eng.)]

பண்பின் சிகரமாய் பாசத்தின் திருவுருவாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து
எங்கள் வாழ்க்கைக்கு நல்வழிகாட்டி
நல்வாழ்வு வாழவைத்த எம் அன்புத் தெய்வங்களே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அச்செழு, நீர்வேலி. (36898)(39-14-26-44)

உங்கள்நினைவில் வாழ்கின்ற: - குடும்பத்தினர்.

## வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை; பயணிகளுக்குப் பெரும் சிரமம்

கோப்பாய்,செப்.27

கோப்பாய் சந்தி, இருபாலைச் சந்தி ஆகிய இடங்களில் உள்ள வீதி விளக்குகள் கடந்த பல மாதங்களாக ஒளிராமையினால் பொது மக்கள் இரவு வேளைகளில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வர்த்தக நிலையங்கள் இரவு நேரங்களில் மூடப்பட்டவுடன் இப்பகுதி ஒரே இருள்மயமாகத் தென்படுவதால் மக்கள் பீதியுடன் பயணம் செய்யவேண்டியுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-72)

## நான்கு குடும்பங்களுக்கு நஷ்டஈட்டுக் காசோலைகள்

வட்டுக்கோட்டை,செப்.27

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆயிரத்து 500 ரூபாவுக்குமேல் வருமானம்பெறும் நான்கு குடும்பங்களுக்கு அசையும், அசையாச் சொத்துக்களுக்கான நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

கடந்தகால வன்செயல்களினால் ஏற்பட்ட அசையும், அசையாச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட நஷ்டஈடு வட்டு. மேற்கைச் சேர்ந்த தியாகராசா இராசம்மா, வட்டு. கிழக்கைச் சேர்ந்த சுந்தரராசா கிறிஸ்ணகுமார், அராலி வடக்கைச் சேர்ந்த கந்தசாமி அன்னம், சங்கானை கிழக்கைச் சேர்ந்த தேவராசா புவனேஸ்வரி ஆகியோருக்கே வழங்கப்பட்டுள்ளது.

நஷ்டஈட்டுக்கான காசோலைகள் அவரவர் வங்கிக் கணக்குகளுக்கு யாழ்.செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (10-161)

### திருத்தி வாசிக்கவும்

நேற்றைய (26.09.2004) உதயனில் பக்கம் 17இல் பிரசுரமாகிய மரண அறிவித்தலில் **ஆறுமுகம் ரஞ்சிதபாதம்** என்று பிரசுரமான பெயரை **ஆறுமுகம் குஞ்சிதபாதம்** என்று திருத்திவாசிக்கவும்.


**ரைப்செற்றிங்** (Type Setting) **செய்ய ஆள் தேவை**

Photo shop, Coral Draw *தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். திருநெல்வேலியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.*

தொடர்பு:

**"நியூதாரங்கி"**

109, பலாலி வீதி, திருநெல்வேலி.

T.P:021 222 2132. (36894)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




செல்வன் 27.09.2004

**லக்ஸ்மன் விதுசன்**

சாரையடி.
புலோலி தெற்கைச் சேர்ந்த
**லக்ஸ்மன் -விஜயசீலி**
தம்பதிகளின்
ஏகபுதல்வன்
செல்வன்

**விதுஷன்**

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (27-09-2004) திங்கட்கிழமை தனது இல்லத்தில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

செல்வன் விதுசனை சாரையடி அன்னை வேளாங்கண்ணி அருள்பெற்று பல்லாண்டு காலம் நீடூழிவாழ டோகாவில் உள்ள அப்பா, புலோலியில் உள்ள அம்மா, சவூதி அப்பப்பா, அப்பம்மா, சாரையடி சித்தப்பா மற்றும் தாத்தாமார், பெரியம்மா குடும்பம், சின்னமாமா, ஆசை மாமா, சாரையடியில் உள்ள தம்பி மாமா, அன்ரிமார், பேரன்மார், பேர்த்திமார், அத்தைமார், சித்தப்பாமார் ஆகியோருடன் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

சாரையடி,
புலோலி தெற்கு,
புலோலி. (36901) (26-24-14-44)

தகவல்:
பா.றெஜீ சித்தப்பா.


## ஆனந்தா பிறைவேற் கிளினிக்



**173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

இல.195, சிவன்பண்ணை வீதியில் இயங்கிவந்த எமது கிளினிக் தற்போது விரிவுபடுத்தப்பட்டு, 173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் (ஜனசக்தி இன்சூரன்ஸிற்கு அருகில் - பழைய இடத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில்) இயங்கி வருகின்றது. எமது சேவைகள் இன்று (27-09-2004) திங்கட்கிழமை முதல் பிற்பகல் 3.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை (புதியநேரம்) யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் M.B.B.S. வைத்தியர்கள் மூலம் பண்டத்தரிப்பிற்கும் விஸ்தரிக்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

*குறிப்பு:* எம்மால் நேர்முகத் தேர்வுக்கு அனுப்பிவைக்கப்படவிருக்கும் கடிதங்கள் கிடைக்கப் பெறுபவர்கள் 02-10-2004 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கும் பிற்பகல் 2.00 மணிக்கும் இடையில் 173, மானிப்பாய் வீதியில் உள்ள எமது கிளினிக்குக்குச் சமுகந்தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

நிர்வாகி,
ஆனந்தா பிறைவேற் கிளினிக்
173. மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம்.
*(காலை 8.30 முதல் இரவு 8.30 வரை)*

**ஆனந்தா பிறைவேற் கிளினிக்**

(ஜோய்ஸ் பாமஸிக்கு அருகில்) பண்டத்தரிப்பு.

(சி-36900) (14-44-26) *(மாலை 3 மணி முதல் மாலை 6 மணிவரை)*

உதயன்

# ஜனாதிபதி சந்திரிகாவின் இரட்டைவேடத் திட்டம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அடுத்த கட்ட அரசியல் நகர்வுத் திட்டங்கள் குறித்து அவதானிகளும், இராஜதந்திரிகள் சிலரும் தகவல் வெளியிட்டிருக்கின்றனர்.

அதன்படி, இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கான அமைதிப் பேச்சுகளை உடனடியாக ஆரம்பிக்கும் உத்தேசமோ, திட்டமோ ஜனாதிபதிக்கு இல்லை என்பது தெளிவாகி வருகின்றது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக நியூயோர்க் சென்ற ஜனாதிபதி குமாரதுங்க, அமைதிப் பேச்சு முயற்சிகள் தொடர்பான விவகாரத்தை ஒட்டி இரண்டு விதமான - இரட்டைவேட - அணுகுமுறையை அங்கு வெளிப்படுத்தியுள்ளார்.

ஒன்று - அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்க விட்டுக்கொடுப்புகளுடன் தாம் தயாராக இருப்பவர் போலவும், பிடிவாதப் போக்கிலிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் இறங்கிவராமல் இருப்பதால்தான் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாமல் இருப்பதுபோலவும் ஒரு படத்தைச் சித்திரிப்பது.

இதன்மூலம் சர்வதேச மட்டத்தில் தன்னையும் தனது அரசையும் தாராளப் போக்குடைய தரப்பாகக் காட்டிக்கொண்டு, விடுதலைப் புலிகளுக்குக் கெட்டபெயர் ஏற்படுத்தலாம் என்பது அவர் எண்ணம்; திட்டம்.

மற்றது - தீவிரவாதத்துக்குப் பலாத்காரரீதியில் பதில் கொடுக்க விரும்பாத அகிம்சாவாதி, சாத்வீகவாதி எனத் தம்மைக் காட்டிக்கொள்வது.

அமைதி முயற்சிகள் தொடர்பான தமது மெத்தனப் போக்கால் நாட்டில் மீண்டும் இரத்தக்களரி ஏற்படும் என்பதை நன்கு உணர்ந்துள்ள நாட்டின் தலைவி, அத்தகைய நிலையில், அதற்குத் தாமே காரணம் என்ற குற்றச்சாட்டு எழும் என்பதை முற்கூட்டியே உணர்ந்துகொண்டு, அந்தக் குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்கொள்வதற்காக முன்னெச்சரிக்கையாக நடத்துகொள்கிறார்.

தீவிரவாதத்துக்குப் பலாத்கார முறையில் அல்லாமல் பேச்சு, கலந்துரையாடல் ஆகியவற்றின் மூலமும் தீர்வு காணலாம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷுக்கே, போதி மாதவன் போல அவர் ஆலோசனை போதிப்பது தமது யுத்தவெறிப் போக்கை மூடிமறைக்கும் முயற்சி.

தமது பொறுப்பற்ற போக்கால் நாட்டில் மீண்டும் யுத்தம் மூளும்போது, அதற்குத் தாம் காரணமல்லர், பாவம் ஓர் அகிம்சாவாதி - சாத்வீகவாதி - வேறுவழியின்றி பயங்கரவாத இயக்கமான புலிகள் அமைப்பைப் பலாத்கார முறையில் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றார் என்ற பச்சாதாபத்தை அத்தகைய சந்தர்ப்பத்தில் உலகத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக முன்கூட்டியே திட்டமிட்டு நடித்துக் காய்நகர்த்துகின்றார் அவர்.

இந்த நடிப்பில் கணிசமான வெற்றி தமக்குக் கிடைத்திருப்பதாக ஜனாதிபதி குமாரதுங்க கருதுகின்றார் என்கின்றன இராஜதந்திர வட்டாரங்கள்.

"தனது தரப்பைச் சர்வதேச மட்டத்தில் உயர்த்தச் செய்வதில், இம்முறை தனது வெளிநாட்டுப் பயணத்தில் தாம் கணிசமான வெற்றி கண்டிருக்கின்றார் என்று ஜனாதிபதி குமாரதுங்க புளகாங்கிதம் அடைந்துள்ளார். அவரது மனவுறுதி இதில் மேலும் மேம்பட்டிருக்கின்றது. எனவே, அமைதி முயற்சிகள் தொடர்பாக - சிங்களப் பேரினவாதத்துக்குச் சார்பான - தனது இறுக்கப் போக்கை ஜனாதிபதி குமாரதுங்க மேலும் இறுக்குவதற்கே அதிக வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதற்கான தெம்பை இந்த வெளிநாட்டு விஜயங்கள் மற்றும் அங்கு பல்வேறு தரப்பினர்களுடன் அவர் நடத்திய பேச்சுகள் என்பன அவருக்கு வழங்கியுள்ளன.

"எனவே, அவர் இப்போதைக்குத் தமது பிடிவாதப் போக்கிலிருந்து இறங்கி வந்து,

"பேச்சுக்கான உகந்த சூழ்நிலையை ஏற்படுத்த அதிகம் வாய்ப்புகள் இல்லை. அதற்கான சாத்தியங்கள் குறுகிவருகின்றன," இவ்வாறு முக்கிய சில இராஜதந்திர வட்டாரங்கள் கள நிலைமைகள் குறித்துப் புலிகளுக்கு அறிவுறுத்தியுள்ளன என்று அறியவருகின்றது.

ஜனாதிபதியின் கவனம் இப்போது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் அல்ல; தன்னுடைய அரசைக் கவிழ்த்துவிடாமல் காப்பாற்றுவதும் தனது தற்போதைய ஜனாதிபதிப் பதவிக் காலத்தின் பின்னரும் ஆட்சி, அதிகாரத்தில் தாம் நீடிப்பதை உறுதிசெய்யும் மாற்று மார்க்கங்களைச் சாத்தியமாக்குவதும்தான் என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

எனவே, இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் என்ற பெயரில் அவர் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் எல்லாம் இந்த உள்நோக்கத்தை சுற்றியவையாக அமையும் என்பது நிச்சயம்.

சர்வதேச சமூகம் இந்த நடிப்பைச் சரியாக அடையாளம் கண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு யதார்த்த நிலையைத் தெளிவுபடுத்தவேண்டும்.

புலிகள் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்திக்கொண்டு, அதில் அரசியல் நடத்த முயலும் ஜனாதிபதியின் பொட்டுக்கேட்டை அம்பலப்படுத்துவதே அமைதி முயற்சிகளை நீதியான வழியில் முன்நகர்த்துவதற்கு இப்போதுள்ள ஒரே வழிமுறையாகும்.

# வீடமைப்புத் திட்டத்தைப் பார்வையிட உலகவங்கி அதிகாரிகள் வருகின்றனர்

யாழ்ப்பாணம்,செப்.27

உலக வங்கியின் உதவியுடன் யாழ். மாவட்டத்தில் வீடமைப்புத் திட்டத்தை மேற்கொள்வது தொடர்பாக ஆராய உலகவங்கியின் உயர்மட்டக்குழு ஒன்று எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றது.

வடக்கு - கிழக்கில் 60 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம் ஒன்றை உலக வங்கி நடைமுறைப்படுத்த முடிவுசெய்திருந்தது. இத்திட்டத்தின் முதல்கட்டமாக வடக்கு - கிழக்கில் எட்டு மாவட்டங்களிலும் தலா நூறு வீடுகள் அமைக்கப்பட்டு வந்தன. இந்த வீடுகள் அமைப்பதைப் பொறுத்துத் தமது திட்டத்தை நடைமுறைப் படுத்துவது குறித்து உலக வங்கி முடிவு செய்யவிருந்தது.

யாழ்.மாவட்டத்தில் முதல்கட்டமாக அமைக்கப்பட்டு வந்த நூறு வீடுகளில் பெரும்பாலானவை பூர்த்தியடையும் நிலையை அடைந்துள்ளன.

அவற்றைப் பார்வையிட்டு தமது திட்டத்தை இறுதியாக்கும் நோக்குடன் உலக வங்கி அதிகாரிகள் எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றனர்.

அதைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களுக்கும் அவர்கள் சென்று ஆரம்பக் கட்ட வீடுகளைப் பார்வையிடுவர்.

பெரும்பாலும் 60 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம் தொடர்பான உடன்பாடு அரசுக்கும் உலக வங்கிக்கும் இடையில் அடுத்தமாதம் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (3)

# சுழிபுரம் நாவலர் முன்பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம் நிர்மாணிப்பு

சுழிபுரம்,செப்.27

சுழிபுரம் நாவலர் சனசமூக நிலையத்தினர் நடத்தும் முன்பள்ளிக்கென நிரந்தரக் கட்டடம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

மேற்படி சனசமூக நிலையத்தின் நூல் நிலையத்திற்கு அருகில் இந்தக் கட்டடம் நிறுவப்பட்டுவருவதாக சனசமூக நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டு இலட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் நிறுவப்பட்டு வருவதாகவும்-

கட்டடப் பாவனைக்கு வேண்டிய பனை மரங்களை நிலைய உறுப்பினர்கள் சிலர் இலவசமாக வழங்கியுள்ளனர் என்றும்-

கட்டட வேலைகள் வருட இறுதிக்குள் பூர்த்தியாகும் என்றும்-தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கட்டடம் நிறுவுவதற்கான காணியை அமரர் வைத்திய கலாநிதி எஸ்.தம்பிராசா குடும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (எ-28)



மானிப்பாய் றோட்டறக்ட் கழகமும் மானிப்பாய் மகளிர் கல்லூரி இன்ரறக்ட் கழகமும் இணைந்து நடத்திய பதவியேற்பு வைபவம் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். றோட்டரிக் கழகத் தலைவர் ஈ.சரவணபவன் மங்களவிளக்கேற்றுவதையும் கொழும்பு மேற்கு றோட்டறிக் கழகத் தலைவர் இராசலிங்கம் ரகுநாதன், மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்தின் 'புதுமை' சஞ்சிகையை சஞ்சிகை ஆசிரியர் குளோறியலிடமிருந்து பெறுவதையும் படங்களில் காணலாம். *(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# பறாளாய் தேரின் சிற்பங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை

வலிதென்மேற்கு,செப்.27

சுழிபுரம் - பறாளாய் விநாயகர் ஆலயத்தின் 350 வருடகால பழைமை வாய்ந்ததும், சித்திரக் கலையம்சம் பொருந்தியதுமான தேரின் சிற்பங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தேரைச் சுற்றித் தூண்கள் நாட்டப்பட்டு, தேருக்கு மேல் கூரை, ஓடுகளால் வேயப்பட்டு வருவதாக ஆலய பூசகர் சிவஸ்ரீ க.பிறைசூடிக்குருக்கள் தெரிவித்தார்.

கடந்த வருடம் இத் தேரின் கலைச் சிற்பங்கள் சில திருடர்களால் கழற்றி எடுத்துச்செல்லப்பட்டது தெரிந்ததே. இனிமேல் இவ்வாறான திருட்டு நடைபெறாத வண்ணம் இத்தேருக்குப் பாதுகாப்பாக இக்கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

காலவெள்ளத்தில் கலையம்சம் பொருந்திய - வரலாற்றுப் பெருமைமிக்க இத்தேரை அழியவிடாது காட்சிப்பொருளாக இங்கு நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதையிட்டுத் பலரும் பாராட்டும் மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளனர். (4-135)

# வீதிகள் திருத்தப்படவில்லை!

வலி.தெற்கு,செப்.27

மானிப்பாய் பிரதேசத்தில் உள்ள பல குறுகுத்தெருக்கள் கடந்த பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமையால் பொதுமக்கள் அவற்றினூடாகச் செல்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சில குறுந்தெருக்கள் 'பற்றைகள், முட்கள் வளர்ந்து காணப்படுகின்றன. இன்னும் சில தெருக்களின் ஓரங்களில் பாம்புப் புற்றுக்கள் விளைந்து காணப்படுகின்றன.

வீதிகளினூடாகப் பயணம் செய்பவர்கள் பயந்துகொண்டே செல்லவேண்டியுள்ளது. மழைகாலம் ஆரம்பித்திருப்பதால் இவ்வீதிகளில் போக்குவரத்துச் செய்வது மேலும் சிரமம் தரக்கூடும் எனப் பொதுமக்கள் அஞ்சுகின்றார்கள்.

மானிப்பாய் மேற்கில் உள்ள கேலங்காமம் வீதி, குளக்கட்டு வைரவர் வீதி, இராய்குள வீதி என்பனவும்-

மானிப்பாய் வடக்கில் உள்ள தெலை பேசி இணைப்புவீதி, நெசவாலை வீதி, உச்சியோடை வீதி, இராசகாரியர் வீதி, என்பனவும் - மானிப்பாய் கிழக்கில் உள்ள வடலித்தோட்ட வீதி, ஆனந்தன் கோவில் வீதி என்பனவும் -

மானிப்பாய் தெற்கில் உள்ள ஐந்தாம்கட்டை ஒழுங்கை, பொதுச்சந்தை முன் ஒழுங்கை ஆகியவையுமே இவ்வாறு புனரமைக்கப்படாது போக்குவரத்துக்கு இடைஞ்சல் தரும் வீதிகளாக உள்ளன என்று பொதுமக்கள் சார்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விரைவில் இவ் வீதிகளைப் புனரமைத்து, பற்றைகள், முட்கள் போன்றவற்றை அழித்துத் துப்பரவு செய்து இலகுவான போக்குவரத்துக்கு வசதிசெய்து தருமாறு மானிப்பாய் மக்கள் பிரதேச சபையினரிடம் கோரி உள்ளனர். (4-152)

## ஏ.ரீ.பி. ஞாபகார்த்த விருது மெற்றாஸ் மயிலுக்கு

இவ்வாண்டுக்குரிய கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஞாபகார்த்த விருதினை நாடகக்கலைஞர் கலாபூசணம் செ.மெற்றாஸ் மயிலுக்கு வழங்க விருதுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-201)

## உதயவாக்கு

நேற்றைய பயன் இல்லாத எண்ணங்கள் செயல்களுக்கு அவற்றின் அடையாளமே இல்லாதபடி முற்றுப்புள்ளி வைத்துவிடு.

## நாளை

புரட்டாதி 12
செவ்வாய்க்கிழமை
(28.09.2004)
திதி : பூரணை
முன்னிரவு 7.26 வரை.
நட்சத்திரம் : உத்தரட்டாதி
பின்னிரவு 4.51
சுபநேரம்: 10.32 - 12.02
ராகுகாலம்: 3.02 - 4.32
(பழைய நேரப்படி)

# மறவன்புலோ வயல்களில் விதைப்பை விரைவில் ஆரம்பிக்குமாறு அறிவுறுத்து

வரணி,செப்.27

நெற்செய்கைக்காக விடுவிக்கப்பட்ட மறவன்புலவு வயற் பகுதிகளில் உடனடியாக விதைப்பு சார்பான ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கைதடி கமநல சேவைகள் நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

உணவு விவசாய நிறுவனத்தில் இவ் விவசாயிகளுக்கு இலவசமாக உள்ளீடுகள் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இராணுவத்தால் அண்மையில் மறவன்புலவு பகுதியில் ஒரு பகுதி வயல் நிலங்கள் நெற்செய்கைக்காக விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-170)

# மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு; வரணிக்கு முன்னுரிமை வழங்க உறுதி

வரணி,செப்.27

இதுவரை மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுகள் வழங்கப்படாத வரணி வடக்கு, இடைக்குறிச்சி, மாசேரி, நாவற்காடு மற்றும் வரணி இயற்றாலை ஆகிய பிரிவுகளுக்கு விரைவில் கொடுப்பனவுகளை வழங்க முன்னுரிமை அளிப்பதாக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் உறுதியளித்துள்ளார்.

அண்மையில் வரணிப் பிரதேசத்திற்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் பொ.கஜேந்திரகுமாரிடம் மேற்படி பிரதேசப் பொதுமக்களும் பொது நிறுவனங்களும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுகளை விரைவில் பெற உதவி செய்யும்படி கேட்டுக்கொண்டதையடுத்து அவர் அவ்விடயத்தை அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தார்.

இதனையடுத்துக் கொடுப்பனவுகள் வழங்கும்போது மேற்படி இடங்களுக்கு முன்னுரிமையளிப்பதாக அரச அதிபர் தெரிவித்தார் என்று கூறப்பட்டது.(4-170-203)

# பருவமழை ஆரம்பித்திருப்பதால் காலபோகச் செய்கை மும்முரம்!

வலி.தெற்கு,செப்.27

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காலபோகத்துக்கான பருவமழைக்காலம் ஆரம்பித்து விட்டதால் விவசாயிகள் சுறுசுறுப்படைந்திருக்கின்றனர்.

காலபோக நெல்விதைப்புக்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வயல் நிலங்களை உழுது பண்படுத்தல், குப்பைகள், எருக்கள், பசளைகளை இடுதல், வரம்புகளை சீர்செய்தல் போன்ற பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயப் போதனாசிரியர்கள் விவசாய சம்மேளனங்களினூடாக விவசாயிகளைச் சந்தித்துக் காலபோக நெற்செய்கைக்கு வேண்டிய ஆலோசனைகள், அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

நெல்விதைத்தல், அறுவடைசெய்தல், இரசாயனப் பொருள்கள் பயன்படுத்தல் என்பன போன்ற விடயங்களுக்கான ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன் செயற்கைப் பசளைக்குப் பதிலாக இயற்கை பசளைகளைப் பயன்படுத்துமாறும் வலியுறுத்தி வருகின்றனர்.

களைகளை - புல்லுகளைக் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி செயன்முறை விளக்கங்கங்கள் (Demonstration) மூலம் விளக்கமளித்தும் வருகின்றனர்.

ஒக்டோபர் மாதம் 15 -20 ஆம் திகதிக்குள் நெல்லை விதைத்தால்தான் அடுத்த வருடம் பெப்ரவரி - மார்ச் மாதங்களில் அறுவடை செய்யக்கூடியதாக இருக்கும் எனவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. (4-152)

## நாலாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் விநியோகம்

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினால் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்து இப்பகுதி முகாம்களில் வசித்து வருகின்ற குடும்பங்களுக்கு வாளி, கயிறு, கூரைவிரிப்பு, கத்தி, குடம் போன்ற பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் அனைத்துக் குடும்பங்களும் பயன் பெற்றுள்ளன. (10-161)



சாவகச்சேரி, டச்சுவீதி ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தினர் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற சிவபாலச்சந்திரன் கானமிர்தா என்னும் மாணவிக்கு ஆயிரம் ரூபா பணப்பரிசினை சங்கத் தலைவி திருமதி உ.சண்முகநாதன் வழங்குவததைப் படத்தில் காணலாம். (படம் : தென்மராட்சிச் செய்தியாளர்)

# எழுவைதீவு பிரதான வீதியில் ஒரு பகுதி புனரமைக்கப்படுகிறது

ஊர்காவற்றுறை,செப்.27

கடந்த 25 வருடங்களுக்கு மேலாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் இருந்த எழுவைதீவு பிரதான வீதி, வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் புனரமைப்புச் செய்யப் பட்டு வருகிறது.

இதற்கென யாழ்ப்பாணத்தில் வைத்து எடுத்துவரப்படும் கற்கள் கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையில் வைத்து பறிக் கப்பட்டு உரப்பைகளில் நிரப்பப்படுகின்றன.

பின்னர் இவை உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்டு இறங்குதுறையில் வைத்து படகுகளுக்கு மாற்றி அவைமூலம் நெடுந்தீவு இறங்குதுறைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. அங்கிருந்து இரண்டு சில்லு உழவு இயந்திரம் மூலம் குறித்த இடங்களில் பறிக்கப்பட்டு வருகின்றன.

எழுவைதீவு பிரதான வீதி சுமார் இரண்டரைக் கிலோ மீற்றர் தூரம் உள்ளபோதிலும், நற்பெரவ சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் வரையே புனரமைப்புச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-16)

# சேது சமுத்திரத் திட்டம் குறித்து பல்கலையில் நாளை கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறையின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞான படிப்புகள் வட்டம் நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு யாழ் பல்கலைக்கழகப் பொறியியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் 'சேது சமுத்திரத் திட்டமும் இலங்கை மீதான அதன் தாக்கமும்' எனும் பொருளில் புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.சூசை ஆனந்தன் கருத்துரை ஆற்றுவார்.

சமூகவிஞ்ஞான, சமூகவிஞ்ஞானத்துறை சார்ந்த ஆர்வலர்களும் செய்தியாளர்களும் சமுகம் தந்து கலந்துரையாடலில் பங்காற்றிப் பயன்பெறுமாறு சமூக, விஞ்ஞான படிப்பு வட்ட செயற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (எ-13)

# நாடி வரும் அடியவர்களுக்கு வாரி வழங்கும் வல்லிபுரநாதர்

வரலாற்றுப் பிரச்சித்திபெற்ற துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகின்றது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

திருமால் வழிபாடு தமிழ மக்கள் மத்தியில தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. வேதங்களாலும் புராண இதிகாசங்களாலும் போற்றப் படும் திருமாலைத் தொல்காப்பியர் முதல் மகா கவி பாரதியார் வரை பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள். "மாயோன் மேய காடுறை" உலகம் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. சிவன், முருகன் ஆகியோருடன் திருமாலுக்கு கோயில் அமைந்திருந்த வரலாற்றினை "நீலமேனி நெடியோன் கோயில்" எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. பெரும்பானாற்றுப் படை "பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்" எனத் திருமாலைக்குறிப்பிடுகின்றது.

### வல்லிபுர ஆழ்வார் ஆலயச்சிறப்பு

இலங்கையில் பூர்வீகக்குடிகளாக இருக்கின்ற நாகர்கள் பாம்பு வழிபாட்டுக்காரர்களாகவும், சிவ வழிபாட்டுக்காரர்களாகவும் இருந்தார்கள். நாக வழிபாடும், சிவவழிபாடும் இணைந்திருக்கும் திருத்தலமே வடமராட்சி கிழக்கில் உள்ள நாகர் கோயிலாகும். இந்து சமயத்திருத்தலங்கள் பல வடமராட்சிப் பிரதேசம் எங்கும் பரந்து அமைந்துள்ளன. புராதன விநாயகர் தலமாகிய தில்லையம்பலப் பிள்ளையார் கோயில், சிறந்த சிவஸ்தலமாகிய நாகா கோயில், அன்னதானக்கந்தன் என அடியார்களால் அழைக்கப்படும் செல்வச்சந்நிதி முருகன் கோயில் எனப்பல திருத்தலங்கள் வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து தம்மை நாடிவரும் அடியார்களுக்குத் திருவருளை வாரி வழங்கிக்கொண்டிருக்கின்றன.

**வல்லிபுர நாதன் • நல்லருள் • தந்திடுவான்**

இராகம் – வாசஸ்பதி தளம் – ஆதி

பல்லவி

வல்லிபுர ஆழ்வாரை வடம்பிடித்திழும்
தொல்லை களைந்திடுவான் தூய நல்லருள் புரிவான்,

அனுபல்லவி

எல்லையில்லா ஞானம் இசைதனில் தந்திடுவான்
நல்ல தெல்லாம் தருவான் நம்பிக்கை கொண்டோருக்கு
(வல்லி)

சரணம்

பாம்பணை மீதினில் பள்ளி கொள்வான் கண்ணன்
பாற்கடல் மீதிலும் பள்ளி கொள்வான் கள்வன்
நம்பிக்கை கொண்டோருக்கு நம்பிக்கையாயிருப்பான்
தும்பிக்கையானுக்கு தூய மாமனிவன்.
(வல்லி)

சங்கு தனை எடுத்தும் சங்குதனைக் கொடுத்தும்
பங்குதனைப் பகிர்ந்து பாரதப்போர் முடிப்பாய்
எங்கள் திருநாட்டின் எல்லை தனைக்காண
சங்குதனைதந்து சத்தியம் காத்திடய்யா.
(வல்லி)

- அல்லையூர் மருதன்.

சிங்கை நகர் என்ற பெயரில் ஆரியச்சக்கரவர்த்திகளின் ராஜதானியாக வல்லிபுரம் கிராமப் பகுதி திகழ்ந்தது என்பது அறிஞர்கள் சிலரின் கருத்து ஆகும். ஆரியச் சகரவர்த்திகள் சிங்கையாரியன், சிங்கையாதீபன், சிங்கை காவல் மன்னன் என்ற விருதுப் பெயர்களைத் தாங்கி இருந்தார்கள் என்பது தட்சிண கைலாய மானமியம் தரும் செய்தி ஆகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் திருமால் திருப்பதிகள் என்று பேணப்படும் மூன்று பெரிய திருத்தலங்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணப் பட்டினத்தின் மையத்திலே அமைந்திருக்கும் பெருமாள் கோயிலும், பொன்னாலையில் அமைந்துள்ள வரதராஜப் பெருமாள் ஆலயமும், வல்லிபுரப் பகுதியில் இருக்கும் வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் குறிப்பிடத்தக்க விஷ்ணு திருத்தலங்களாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமைந்த சிறந்த ஷேத்திரங்களில் ஒன்றாக வல்லிபுர ஆழ்வார் ஆலயம் காணப்படுகின்றது. வல்லிபுரக் கோயிலின் தல மகிமையைப் பற்றித் தட்சிண கைலாய புராணம், தட்சிண கைலாயமான்மியம் என்னும் நூல்களிலும் "கோகில ஸந்தேச" என்ற குயில் விடுதூது சிங்களக்கவிதை நூலிலும் கூறப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலே வேலை ஆவாகனம் பண்ணி ஸ்தாபித்து வழிபடும் முருகன் கோயில்களாக நல்லூரும் செல்வச்சந்நிதியும் காணப்படுகின்றன. இதேபோல சக்கரத்தை மூலக்கருவறையில ஸ்தாபித்து வழிபடும் ஒரே ஒரு திருத்தலம் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் ஆகும். இத்தலத்தோடு தொடர்புடைய குருக்கட்டுப் பிள்ளையார் ஆலயம் கோயிலுக்கு மேற்கே அமைந்திருக்கிறது. இந்த ஆலயத்தின் மேற்கே உள்ள திருக்குளம் ஒன்றிலிருந்துதான் திருநாமம் எடுக்கப்பட்டு வந்தது.

தமிழ்நாட்டில் உள்ள விஷ்ணு தலங்களோடு யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மாயவன தலங்களை ஒப்பிட்டு அறிஞர் பெருமக்கள் கூறுவார்கள். காஞ்சியிலே வரதராஜப் பெருமாள் கோயில் போல பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலும் திருப்பதி வெங்கடாசலபதி கோயில் போல வண்ணார்பண்ணைப் பெருமாள் கோயிலும் ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோயில் போல வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோயிலும் அமைந்துள் ளன. "தீர்த்த விழாக்கண்டு களிக்கின்றபோது திருவரங் கம் திகழு நலம் அதுவும் காண்பாய்" எனச் ஸ்ரீரங்கத் திற்கும் வல்லிபுரத் திற்கும் இருக்கும் தொடர்பினை வல்லிபுரத் திருமால் என்ற நூல் விளக்குகிறது.

மாயவனுடைய கையில் இருப்பது சக்கரம் என்பதால் அவன் சக்கரபாணி என்ற பெயரைப் பெறுபகின்றார். அண்டங்கள் யாவையும் உண்டு பண்ணுதலும், நிலை பெறச் செய்தலும் பின் அவைகளை நீக்குதலும் நாரயணனுடைய செயலே யாகும். காத்தற் தொழிலைக் குறிப்பது நாராயணனின் கையில் இருக்கும் கையாழியாகிய தர்மச்சக்கரம் ஆகும் அறம் செய்பவர்களைக் காக்கும் தர்மச் சக்கரம் மறம் செய்பவர்களை துன்புறுத்துகின்றது. இந்தத் தர்மச் சக்கரமே வல்லிபுர ஆழ்வார் கோயிலின் மூலஸ்தானத்தில் இருந்து அடியார்களுக்கு அருளை வாரி வழங்குகின்றது.

### திருமாலின் பெருமை பேசும் திவ்வியப்பிரபந்தம்

மொழியியல் ஆராய்ச்சியாளர்கள் தமிழ் மொழியை பக்திமொழி எனப்போற்றுவதற்கு பன்னிரு திருமுறைகள் போல ஆழ்வார்கள் அருளிய திவ்வியப்பிரபந்தப் பாடல்களும் காரணமாக உள்ளன. அடியார்களின் நெஞ்சில் இறைவன் மீது பக்திப் பயிரைத் தழைக்கச் செய்தவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் திருமாலின் திரு அவதாரங்களிலும் திருக்குணங்கள் என்னும் கல்யாண குண மகிமைகளிலும் தம்மை மறந்து உள்ளம் உருகிப்பாடிய உத்தமர்கள் இவர்கள். இறைவனை மானுட அனுபவங்களுக்கு உட்படுத்திக் கற்பனை செய்து பாசுரங்களைப் பாடியுள்ளார்கள். பக்தி உணர்வுக்குப் புதிய பரிமாணம் கொடுத்துத் தாய்மை, காதல் முத லிய உணர்வுகள் ஊடாகத் திருமாலை ஆழ் வார்கள் அணுகிய தன்மையை அவர்களுடைய பாடல்களில் காணலாம்.

தன்னை நாயகியாவும் கண்ணனை நாயகனாகவும் கொண்டு ஆண்டாளம்மை பாடிய பாடல்கள் இறைவன் மீது அம்மையார் கொண்ட தெய்வீகக் காதலை உணர்ததும் பாடல்களாகும். ஆண்டாள் மாயவன் மீது கந்தம் பொழியும் பூமாலை தொடுத்ததோடு சந்தம் பொழியும் பாமாலையும் தொடுத்து வந்தார். "மானிடர் கென்று பேச்சுப்படில் நான் வாழ்கிலேன்" என்ற உறுதிபாட்டோடு கண்ணன் மீது காதல் மீதூர ஆண்டாள் அம்மையார் பாடல்களைப் பாடிவந்தார். மாயவனின் நினைப்பிலிருந்து தன்னால் மீளவும் முடியாது; அவனை மறக்கவும் முடியாது. என்னுள்ளே வியாபித்து நின்று என்னை இயக்குகின்றான் என்பதை "மாயவன் வந்துருக்காட்டுகின்றான்" என ஆண்டாள் தனது பாடலில குறிப்பிடுகின்றார்.



பாராளும் பெருமையிலும் பார்க்க பரந்தாமன் புகழபாடும் பெருமை சிறப்பு உடையது என வாழ்ந்தவர்களில் மன்னர் பெருமானாகிய குலசேகர ஆழ்வாரும் ஒருவராகத் திகழ்நதார். இராம அவதாரத்தில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. திருவேங்கடத்தான் வினைகளைப் பொசுக்கும் தன்மை உடையவன். அரங்கநாதப் பெருமானை நினைந்துருகிப் பாடும் பொழுது நின் திருக்கோயில் படியாகக் கிடந்து உன் பவளவாய் காண விரும்புகின்றேன எனப் பக்தி சிரத்தையோடு குலசேகர ஆழ்வார் பாடுகிறார்.

பக்திப் பணியானது தமிழ்நாட்டில் சைவத்தையும் வைவணவத்தையும் சமண, பௌத்த சமயப் பிடியில் இருந்து மீட்டெடுத்து துறவு நெறியை முதன்மைப்படுத்தி நின்ற சமணர், பௌத்தர் ஆகியோர் வாழ்ந்த சூழலிலே நாயன்மார்களும் ஆழ்வார்களும் இல்வாழ்க்கையின் சிறப்பைத் தமது பாடல்களில் விளக்கிக் காட்டியதுடன் வாழ்ந்தும் காட்டினார்கள்.

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**
இந்து சமய கலாசார
அலுவல்கள் திணைக்களம்
மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்

கடும் நோன்புகளையும் புலனடக்கத்தையும் பேணி நின்ற பௌத்த, சமண சமயத்தவர்களின் வழிமுறைக்கு முன்னால் பக்தி உணர்வு, இறை திருநாமத்தை உச்சரித்தல் ஆகிய இலகுவான அணுகுமுறைகளைச் சைவமும் வைணவமும் எடுத்துக் கூறின. சைவம், வைணவம் ஆகியவை மேற்கொண்ட பக்தி இயக்கத்தின் செயற்பாடு கடவுட் சிந்தனையை முன்னிறுத்தி சராசரி மனிதனின் உணர்வுகளைத் தொட்டு நின்றது. ★

# வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய
# தேர்த்திருவிழாச் சிறப்புமலர் - 27.09.2004

## முகாமை அறங்காவலரின் செய்தி

ஒரு ஆலயத்தின் மூலமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருக்கோலத்தைப் பொறுத்து உற்சவங்கள் இடம்பெறும். வல்லிபுர சேத்திரத்தில் நாராயணனின் திருவிளையாடல்கள், லீலைகள், அவதார நோக்குகள் ஆகியவை உற்சவங்கள் மூலம் சித்திரிக்கப்படுகின்றன. எனினும், தேர் ஓட்டம், தீர்த்த உற்சவங்கள் ஒரே ஒழுங்குமுறையில் எல்லா ஆலயத்திலும் அமையும்.

வல்லிபுர மாயவனின் தாரண வருட மஹோற்சவம் இம்மாதம் 13 ஆம் திகதி ஆரம்பித்து தேர் ஓட்டம், தீர்த்தம் ஆகியன முறையே இம்மாதம் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் நடைபெறும். இந் நன்நாள்களில் வெளிவரும் பத்திரிகைகள் தாங்கி வரும் சிறப்பிதழ்களுக்கு இச்செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மாதம் 27 ஆம் திகதி திங்கள் காலை 8.00 மணிக்கு வல்லிபுர மாயவன் உக்கிர தோற்றத்தில் காட்சிதந்து சித்திரத் தேரில் எழுந்தருளி வீதிவலம் வருவார். வீதிவலம் நிறைவுறும் போது உக்கிரம் மறைந்து சாந்த நாயகனாக பச்சைசாத்தி இருப்பிடம் வந்தடைவார்.

28ஆம் திகதி பூரணை தினமான செவ்வாயன்று சந்திரோதய நேரத்தில் சமுத்திரத்தில் தீர்த்தமாடும் பொருட்டு பிற்பகல் 4.30 மணியளவில் சமுத்திரம் நோக்கித் தொண்டர்கள் தோளில் சுமந்து செல்ல பக்தர்கள் புடைசூழ எழுந்தருளுவார். சமுத்திரத்தில் அனுமார், சண்டேஸ்வரர் ஆகியவற்றுக்கு அபிஷேகம் செய்த பின் சந்திரோதயத்தில் தீர்த்தமாடியதுடன் ஆலயம் நோக்கிப்புறப்படுவார்.

வல்லிர மகாஷேத்திரத்தின் அருங்காட்சிகளை நேரில் தரிசித்து, அன்றில் ஒளி, ஒலிபரப்பு மூலம் கண்டும், கேட்டும் அன்றில் இச்சிறப்பிதழ்கள் மூலம் மனத்திருத்தி எம் பெருமானின் அருளை யாவரும் பெறவேண்டும் எனப் பரந்தாமனை யாசிக்கின்றேன்.

ஓம் நாராயணா நம

**இ.அன்னலிங்கம்** முகாமை அறங்காவலர்.

## அமைதியும் சாந்தியும் கிடைக்கப் பிரார்த்திப்போம்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் பெருவிழா புரட்டாதி மாதம் 17 தினங்கள் நடைபெறுகின்றது. இப்பெருவிழாவின் போது விரதமிருந்து வழிபடும் பக்தர்கள், தொண்டர்கள், தமிழ் மக்கள் அனைவருக்கும் எம்பெருமான் இஷ்ட சித்திகளை வழங்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம். தமிழ் மக்கள் அமைதியையும் சாந்தியையும் பெறவேண்டும் என வாழ்த்துகின்றோம். சாந்தி! சாந்தி! சாந்தி!

**வ.கருணாமூர்த்தி**
செயலாளர், அறங்காவலர் சபை.




## பிரதான சிவாச்சாரியார்களின் அருளாசியுரை

ஸ்ரீமத் பகவத்கீதை:சுலோ 67 மோக்ஷசந்யாஸ யோகம்.
இதம் தேநாத பஸ்காய நா பக்தாய கதாசன!
நா சா சுச்ருஷவே வாச்யம் நசமாம் யோ அப்ய ஸூயதி!!

பொருள்: தவமில்லாதவனுக்கும், பக்தியில்லாதவனுக்கும், தொண்டு புரியாதவனுக்கும், என்னை இகழ்பவனுக்கும் இக்கோட்பாட்டை நீ இயம்பாதே!!

ஈசுவரகிருபையானது தற்பெருமையும், கர்வமுமுள்ளவர்களின் உள்ளத்தில் தங்கி நிற்பதில்லை. பணிவுள்ளவர்களின் உள்ளத்தில் தான் அது தங்கி நிற்கும்.!!
ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்சர்.

வல்லிபுர மாயவன் மெய்யடியார்களே!

13.09.2004 கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான எம்பெருமானது மஹோற்சவம் தொடர்ந்து பதினான்கு நாள்கள் நடைபெற்று, இன்று பதினைந்தாம் நாள் மஹோற்சவத்தின் முக்கியத்துவம் வாய்ந்த தேர்த்திருவிழா எனப்படும் சம்கார உற்சவம் என்று கூறப்படும் இரதோற்சவமாகும். எம்பெருமான் சக்ரமாயவன் தேரேறி வீதிவலம் வந்து ஆணவமலத்தை சங்கரித்து அடியார்களின் பாவத்தைப் போக்கியருளுவார்.

நாளைய தினம் எம்பெருமானின் வரலாற்றுச்சிறப்பைக் கூறும் கடலாடல் தீர்த்தமாகும். அஸ்திரதேவர் சகிதமாக ஆஞ்சநேயருடன் பகவான் கடலில் தீர்த்தமாடி அருள்புரிவார். நாமும் எமது பாவங்களையெல்லாம் கடலில் நீராடித்தீர்ப்போம்.

நாளைமறுதினம் மஹோற்சவத்தின் அருளலைக் குறிக்கும் பட்டுத்தீர்த்தமாகும். இம்மூன்று தினங்களிலும் பகவானைத் தரிசிக்கும் அடியவர்கள் பலகோடி புண்ணியங்களைப் பெறுவார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இவ்விடம் வர இயலாதவர்களுக்கும் பகவானைத் தமது இடங்களில் இருந்தே பகவானைப் போற்றுவதனால் பகவானின் நன்மைகளைப் பெறுவார்கள்.

அவனருளாலே அவன் தாள் வணங்கி அவனது அருளாசிகளைக் கூறிக்கொள்வதில் நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

சுபம் நன்றி
கோவிந்த நாம சங்கீர்த்தனம்,
கோவிந்தா ஹரி ஹோவிந்தா!!

*ஸ்ரீஆழ்வார்பீடம்*
*ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்,*
*துன்னாலை வடக்கு, புலோலி. - P.D. 2004.*

**பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குருக்கள்**
**பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமக் குருக்கள்.**
**பிரதான சிவாச்சாரியார்கள்.**

## ஆலயத்தின் அறப்பணிகள்

1. வடமராட்சி கரையோரப் பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்காக உழவு இயந்திரமும் நீர்த்தாங்கியும் கொள்வனவு செய்து நீர்வழங்கி வருகின்றமை.
2. தமிழ் மக்களில் பலரின் நோய்களுக்கு இருதய சத்திரசிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை, சிறுநீரகப்பை சிகிச்சை உட்படப் பலநோய்களுக்கும் வைத்திய சிகிச்சைக்கான கொடுப்பனவுகளை வழங்கியமை.
3. வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களை வழங்கியமை.
4. அறநெறிப் பாடசாலையை நடத்திவருகின்றமை.
5. மந்திகையில் கணனி நிலையத்தினை நடத்தி வருகின்றமை.
6. வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயலின் பாடல்களை இறுவட்டு மூலம் வெளியிட்டமை.
7. செல்வச்சந்நிதி கோயிலுக்கு சித்திரத் தேரினை (80 லட்சம்) செய்து வழங்கியமை.

## வருவாய் தேரில் தருவாய் திருவருளே

*எண்ணிவரு மடியவர்கள் இன்பம் எய்த*
*ஈடிணையில் வரமருளுஞ் செய்கையோடு*
*மண்ணிலுயர் வல்லிபுரப் பதியின் கோயில்*
*கொண்டிருக்கும் கோபியர் கொஞ்சும் ராஜா!*
*பண்ணிறைநின் தேவியர்கள் உவகை கொள்ளப்*
*பாருலக மெங்குமுன் புதுமையது காண*
*எண்ணிலர்க்கு இனியவனே எழிலோங்கு தேரேறி*
*ஏற்றமிகு வரந்தந்து காப்பாய் கோவே!*

\- **மு.தணிகாசலம்**
கற்கோவளம்.

## வல்லிபுர நாதனே நாராயணனே!

*நாளெல்லாம் ஒளி தருவான் நாராயணனே!*
*நாராயணனே! வல்லிபுர நாராயணனே!*
*சூரிய நாராயணனே!*
*சக்கரநாராயணனே!*
*தேவர்குலத் தலைவனிவன் நாராயணனே!*
*தேடிவந்தோர் குறைதீர்ப்பான் நாராயணனே!*
*வல்லிபுர நாராயணனே சூரிய நாராயணனே!*
*சக்கர நாராயணனே!*
*அவனியைக் காத்திடுவான் நாராயணனே!*
*ஆவினங்கள் மேய்ப்பவனிவன் நாராயணனே!*
*பசும்புல்லைக் காட்டிடுவான் நாராயணனே!*
*பக்கமெமக்கருள் புரிபவனும் நாராயணனே!*
*நாராயணனே! வல்லிபுர நாராயணனே!*
*சூரிய நாராயணனே! சக்கர நாராயணனே!*

**-மாருதி** ஆவரங்கால்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள் அனைவரும் பெற்றிட வேண்டிநிற்கின்றோம்.
சுப முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்குக் கைராசியான ஸ்தாபனம்
**மோட்டி புடைவைக் கடல்**
15, நவீன சந்தை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**சிறப்புமலர் தொகுப்பு:**
**த.ஜெயரூபன், ச.யாதவானந்தன்**
**கற்கோவளம்**

தேரேறிவரும் மாயவனின் அருள் வேண்டி நிற்கின்றோம்
மின்சார உபகரணம், கட்டடப்பொருள்கள் விற்பனையாளர்கள்,
**சிவராஜ் ரேடிங்கோ**
பிரதான வீதி, பருத்தித்துறை.
பலசரக்குப் பொருள்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.
**சிவா ரேடிங்கோ**
பிரதான வீதி, பருத்தித்துறை.

கீதை சொன்ன கண்ணன்
வண்ண தேரில் வருகிறான்
சகல விதமான அச்சு வேலைகளையும்
கணனி ஓவ் செற், ஸ்கிறீன் பிறிண்டிங் மூலம்
அமைத்துத் தர நாடவேண்டிய இடம்.
**தமிழ்ப்பூங்கா அச்சகம்**
பிரதான வீதி,
நெல்லியடி.

கீதை சொன்ன கண்ணன்
வண்ணத் தேரில் வருகிறான்.
**S.P.M. ஓவ் செற் பிறின்ரேர்ஸ்**
**S.P.M. கொமினிக்கேசன்**
வி.எம். றோட், பருத்தித்துறை.
T.P.: 0602212675

தேரேறிவரும் மாயவனின்
அருள் வேண்டி நிற்கின்றோம்
**ரகுல சூரிலங்ஸ் புடைவை அகம்**
பிரதான வீதி, பருத்தித்துறை.

வங்கக் கடலில் அவதரித்த கண்ணன்
வண்ணத் தேர் ஏறி வருகிறான்
**வரதமகள் ஆடை அழகுச்சோலை**
**தொலைத்தொடர்பகம்**
உரிமையாளர்: T. அன்பழகன்
பஸ் நிலையம், பருத்தித்துறை.
T.P.: 021 - 22 3264, 0777 - 739842

பார்த்தனுக்குக் கீதை சொன்ன பார்த்தசாரதியாம்
கண்ணன் இன்று வண்ணத் தேரில் வருகிறான்
நீடித்து நிலைக்கும் தரமான தங்க நகைகளை
பெற்றுக்கொள்ள தவறாமல் நாடுமிடம்
**வைஷ்ணவி நகைப் பூங்கா**
பிரதான வீதி, நெல்லியடி.


தேரேறிவரும் மாயவா!
எம்மைப் பார் போற்ற வாழவைக்கும் கோபாலா!!
**அபிசன் எரிபொருள் நிரப்பு நிலையம்**
கந்தமுருகேசனார் சிலை சந்தி, மந்திகை.

கல்லான அகலிகையைக் காத்திட்ட கண்ணன்
வண்ணத் தேர் ஏறி வருகிறான்
**செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை**
T.P.: 021 - 22 63238
பிரதான வீதி, நெல்லியடி.

அலை பொங்கும் கடலோரம் நிலைகொண்ட மாயவனே போற்றி
**ஜனனி நகைமாடம்**
ம.மா.வி.வீதி, நெல்லியடி.
**ஜனனி நகைமாடம்**
மருதடி, பருத்தித்துறை.
**புதிய ஜனனி நகைமாடம்**
பஸ்நிலையம் அருகில், பருத்தித்துறை.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள் அனைவரும் பெற்றிட
வேண்டி நிற்கின்றோம்.
**கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்**
நெல்லியடி, கரவெட்டி.
**எமது சேவைகள்**
1. கிராமிய வங்கிச் சேவை
2. நுகர்ச்சி நிவாரண விநியோகத்துடன்
3. வாடகை சேவை
4. பாலர் கல்வி
5. நூல் நிலையம்
6. நூல் வெளியீடு

தேரேறிவரும் மாயவா!
எம்மைப் பார்போற்ற வாழவைக்கும் கோபாலா!!
அழகிய தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்
**தரன் நகை மாளிகை**
கிளை 1
பிரதான வீதி, பருத்தித்துறை.
கிளை 2
ம.மா.வி.வீதி, நெல்லியடி.





முதன் முறையாக

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

License No : 50445

BS No : 3412:1996
License No : KM41340

ஏக முகவர்கள்.
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5
பெக்ஸ்: 2446554

WATERTEC
Simply Better
முத்திரையை அவதானியுங்கள்

Access Graphics

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## காலபோக நெற்செய்கை தீவகத்தில் மும்முரம்

ஊர்காவற்றுறை,செப்.27

தீவுப் பகுதி விவசாயிகள் காலபோக நெற் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

நாட்டில் உணவுப் பொருள்களுக்கு ஏற் பட்டுள்ள விலை அதிகரிப்பையடுத்து பயன் படுத்தப்படாத நிலையில் உள்ள நெல் வயல் களையும் உழுது செப்பனிட்டு வருகின்றனர்.

இதனால், கடந்த வருடத்தைவிட இம் முறை கூடுதலான ஹெக்டெயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

எனினும், அதிகரித்த செலவுகளுக்கு மத்தி யிலும் நெற்செய்கையை மேற்கொண்டு வரு கின்றபோதும் கட்டாக்காலி மாடுகளால் வரு டாந்தம் பிரச்சினைகளை எதிர்நோக்கிவருவது குறித்து அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, கரம்பன், நாரந்தனை, புளியங் கூடல், வேலணை, அல்லைப்பிட்டிப் பகுதிகளில கட்டாக்காலி மாடுகள் அதிகம் உள்ளதால் இப்பகுதி விவசாயிகள் இந்தக் கட்டாக்காலி மாடுகளை விளை நிலங்களுக்குள் புகுவதைத் தடுப்பதற்கு அதிகாரிகள் விரிவான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். (எ-16)

## மல்லாகம் முன்பள்ளியில் புதனன்று நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.27

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மல்லாகம் வித்தியோதய பாலர் பாடசாலையில் மரம் நாட்டு விழாவும் முதிய வர் ஒருவரைக் கௌர விக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (எ-201)


# University of Jaffna
## Sri Lanka

### Faculty of Graduate Studies
### Notice

**Post Graduate Diploma in Public Administration - Batch III**
**(Academic Year 2004 / 05)**

The Lectures for the above course is scheduled to commence on 02.10.2004. Selected candidates have been informed by post enable them to register for this course.

**Registrar**
**24.09.2004**

(C/37818) (24-16-45)



# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும்
ஆசிரியர் **திரு.வை.முருகதாஸ்** அவர்களின்
பாசமிகு தந்தையார்

அமரர் **இளையதம்பி வைத்திலிங்கம்**

அவர்கள் இறைபதமெய்தியதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அத்துடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/யூனியன் கல்லூரி,
யா/பொன்பரமானந்தர் வித்தியாசாலை, தெல்லிப்பழை.

(36859) (24-16-45)






உ

உரும்பிராய்
# கருணாகரப் பிள்ளையார் கோயில்
# தேர்த்திருவிழா

இன்று (27.09.2004) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணி.

**நாதஸ்வர இசை:**
இணுவில் ச.இராசன் குழுவினர்,
இணுவில் ப.சிவதாஸ் குழுவினர்,
இணுவில் என்.ஆர்.எஸ்.இரவீந்திரன் குழுவினர்,
ஈழநல்லூர் சு.பாலமுருகன் குழுவினர்,
கோண்டாவில் வீ.கே.கானமூர்த்தி குழுவினர்,
கலாபூஷணம் கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினர் (இணுவில்).

**அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள்.**

குறிப்பு: நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்குத் தீர்த்தத் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

கருணாகரப் பிள்ளையார் கோயில்,
உரும்பிராய். (36891) (24-16-45)

உபயகாரர்களும், திருப்பணிச்சபையினரும்.



அனைத்துப் பாடசாலை இன்ரறக்ட் கழகங்களின்
பொறுப்பாசிரியர் மற்றும் தலைவர் ஆகியோருக்கான

# முக்கிய அறிவித்தல்

நல்லூர் றோட்டறக்ட் கழகத்தினால் யாழ். மாவட்ட இன்ரறக்ட் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும் வருடாந்த மெய்வல்லுநர்ப் போட்டியின் இறுதி நிகழ்வுகள் நாளை (28.09.2004) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியள வில் (பு.நே.) யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள் ளது. எனவே, இப்போட்டியில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்த அனைத்துப் பாட சாலைகளின், அனைத்துப் போட்டியாளர்களும் மேற்குறித்த நேரத்திற்குச் சமுகம் தருதல் வேண்டும்.

குறிப்பு: அனைத்துப் பாடசாலைகளின் போட்டியாளர்கள் உட்பட அனைத்து இன்ரறக்ட் கழக உறுப்பினர்களையும் தவறாது அழைத்து வருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நல்லூர் றோட்டறக்ட் கழகம்.

**RTR.PP.T.** ரமணன்
(திட்ட இயக்குநர்).

அனுசரணை:
**கஜமுகன் ஹாட்வெயர்**
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-37857) (24-16-45)



# நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## தம்பு இலட்சுமி

மண்ணில்: 25.11.1937
விண்ணில்: 09.10.2003

பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## சின்னட்டி தம்பு

மலர்வு: 14.04.1930
உதிர்வு: 16.07.1994

**திதி: 2004.09.27 சதுர்த்தசி**

காலங்கடந்தாலும் இங்கே கலையவில்லை
உங்களின் இனிய நினைவுகள்
குடும்பத்திற்கு குலவிளக்காய் வாழ்ந்த
தெய்வங்களே......
கண்ணயர்ந்து போகையிலும் எம்மனக்
கண்முன் நிழலாடுது
உங்களின் அன்பு உருவங்கள்.

**உங்கள் இருவரதும் ஆத்மா சாந்திபெற**
**இறைவனைப் பிரார்த்தித்து நிற்கும்:**

*நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.*

அன்புப் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(36857) (24-16-45)





வல்லிபுர ஆழ்வாரே! தேரேறி வந்தே அருட்காட்சி தாரீர்!
எல்லோரும் கண்டின்புறவே திருவீதி வலம் வாரீர்!

# வரணி ரெக்ஸ்

**Specialist in Wedding Sarees & Shalwar Kameez**

11, நவீன சந்தை உட்புறம், சாவகச்சேரி. தொலைபேசி இல.: 0602213117
11 New Market, Chavakachcheri. Tel.: 0602213117
81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.: 021 - 222 5578
81, Grand Bazar, Jaffna. Tel.: 021 222 5578

(சி-37814) (24-16-45)



## பண்பாட்டு ஊர்வலம், கருத்துரை, கலைநிகழ்வுகள்

# கிளிநொச்சியில் இன்றும் நாளையும் தமிழ்ச்சங்கத்தின் திருக்குறள் மாநாடு!

கிளிநொச்சி,செப்.27

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம் நடத்தும் திருக்குறள் மாநாடு இன்றும் நாளையும் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

முதல்நாள் காலை நிகழ்வுக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமை வகிப்பார். தமிழீழ தேசியக்கொடி மற்றும் தமிழ்ச் சங்கக்கொடி என்பன ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

'வாழ்க்கைத் துணைநலம்' என்ற தலைப்பில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்'ம் "வள்ளுவர் கண்ட கடவுள்" என்ற தலைப்பில் ந.வஜயசுந்தரமும் 'வள்ளுவர் தந்த கல்வி' என்ற தலைப்பில் திருமதி க.மதுரநாயகமும் 'வள்ளுவர் தந்த அறிவியல் என்ற தலைப்பில் பொன்.கணேசமூர்த்தியும் கருத்துரை வழங்குவர்.

மாலை நிகழ்வுகளுக்கு அ.கனகரத்தினம் தலைமை வகிப்பார். இதில் பல கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வில் "வள்ளுவர் தந்த அரசியல்" என்ற தலைப்பில் அ.அமிர்தலிங்கமும் "வள்ளுவனும் உலகமும்" என்ற தலைப்பில் பேராசிரியர் அ.சண்முகதாஸ்'ம் கருத்துரை வழங்குவர்.

மாலை நிகழ்வில் அ.சண்முகதாஸ், பொன்.கணேசமூர்த்தி ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறுவதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இரண்டாம் நாள் பி.ப.2.30 மணியளவில் பண்பாட்டு ஊர்வலமும் நடைபெறவுள்ளது. (4-203)

## கல்விப் பணிப்பாளர்கள் நியமனம்

புதுக்குடியிருப்பு,செப்.27

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையின் கல்வி முகாமைத்துவத்துக்கான பிரதி கல்விப்பணிப்பாளராக நாகமணி தியாகராசா வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிபர் தரம் I ஐச் சேர்ந்த இவர் கரைத்துறைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளராக பொன்னம்பலம் பேரின்பநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். இவரும் மாணவர் அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாதம் 20 ஆம் திகதி முதல் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (4-353)

# புதுக்குடியிருப்பில் கடும் மழை

புதுக்குடியிருப்பு,செப்.27

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கடந்த 20 ஆம் திகதி இடி முழக்கத்துடன் கடும் மழை பெய்தது. சுமார் இரண்டு மணி நேரம் மட்டும் நீடித்தது.

இவ்வளவு காலமும் கடுமையான வரட்சி நிலவிய இப்பகுதியில் இந்த மழை மக்களுக்குட் பெரும் ஆறுதல் அளித்துள்ளது.




எனினும், இந்த மழையினால் புதுக குடியிருப்புப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்பு வடிகாலமைப்பு நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை, முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனை ஆகியவற்றுக்குள் வெள்ள நீர் புகுந்ததால் பாடசாலை மண் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன. மாணவர்கள் பெரும் அவதிப்பட்டனர். வலயக்கல்விப் பணிமனைப் பணிகள் நடக்கவில்லை.

மேலும் இப் பகுதியில் சில கிணறுகள் இடிந்து வீழ்ந்தன. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மின் விநியோகத்திற்கான கம்பங்கள் சரிந்தும் மரங்கள் அவற்றின் மேல் வீழ்ந்ததால் முறிந்தும் காணப்படுகிறது.

சில பகுதியில் கிணற்று நீர் மட்டம் உயர்ந்துள்ளமையால் மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (4-353)

# கிராம சேவை அலுவலகங்களை தனியான இடங்களில் அமைக்குக

## ஒட்டுசுட்டான் மக்கள் கோரிக்கை

ஒட்டுசுட்டான்,செப்.27

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கிராமஅலுவலர்களுக்கான அலுவலகங்கள் தனியாக அமைக்கப்பட வேண்டும் என அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இப்பிரதேசத்தில் உள்ள தனியார் வீடுகள் சிலவற்றில் கிராம அலுவலர்களின் அலுவலகங்கள் செயற்படுவதால் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, கிராம அலுவலர்களது அலுவலகம் அனைவருக்கும் பயன்படத்தக்கவகையில் தனி அலுவலகமாக அமைக்கப்படுவதால் மக்களது தேவையும் இலகுவில் நிறைவேறும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (4-341-201)

# முல்லைத்தீவு தபாலகத்துக்கு கட்டட வசதி இல்லை; பணிகள் ஸ்தம்பிக்கலாம்

ஒட்டுசுட்டான்,செப்.26

முல்லைத்தீவு மாவட்டத்திற்குரிய தபால் அலுவலகக கட்டடம் இல்லாமையால் தனியார் வீடொன்றில் இயங்கிவருகின்றது. இந்த நிலையில் இம்மாதத்துடன் அவ்வீட்டை விடுமாறு உரிமையாளர் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லை. மாவட்டத்தில் தபாலகம் இயங்குவதற்கு கட்டடம் இல்லையென அந்த மாவட்ட தபாலதிபர் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இத்தபாலகம் இவ்வருட முற்பகுதியில் ஒரு தனியார் வீடொன்றில் இயங்கி வந்தது. இம்மாதத்துடன் அவ்வீட்டை வடுமாறு வீட்டின் உரிமையாளர் கோரியுள்ளார்.

இதனையடுத்து இவ்வலுவலகத்தை நடத்துவதற்காகப் பலரிடம் வீடுகளைக் கேட்ட போதும் இதுவரை இடம் கிடைக்கவில்லை. இத்தபாலகத்தைக் கட்டுவதற்கான நிதியினை இதுவரை ஒதுக்கீடு செய்யவில்லை எனவும் அவர் தெரிவித்தார். முன்னைய கட்டடங்கள் இராணுவ நடவடிக்கை காரணமாக அழிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இதனைவிட இந்தத் தபாலகத்துக்கென நிரந்தக் கட்டடம் ஒன்றினைக் கட்டுவதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கீடு எதனையும் செய்யவில்லை. தற்காலிகமாக வேறு இடத்தில் இயங்க வைப்பதற்கும் கட்டடங்கள் கிடைக்கவில்லை. இதனால், மேற்படி தபாலகத்தின் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று அவர் தெரிவித்தார். (4-341)

## சனசமூகநிலையம் அமைக்கப்படுகின்றது

வட்டக்கச்சி,செப்.27

கல்மடு நகரில் உள்ள சம்புக்குளம் பகுதியில் புதிய சனசமூக நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுவருகின்றது.

அப்பகுதி மக்களின் பங்களிப்புடன் சனசமூக நிலையத்திற்கான கட்டட வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (4-405)

## சிரமதானம்

வட்டக்கச்சி,செப்.27

தியாகதீபம் லெப். கேணல் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு வட்டக்கச்சி மகாவித்தியாலய ஆசிரியர்கள் மாணர்கள் இணைந்து கடந்த 22ஆம் திகதி பாரிய சிரமதான நிகழ்வொன்றினை நடத்தியுள்ளனர்.

இதன்மூலம் பாடசாலை வளாகப்பகுதி துப்புரவு செய்யப்பட்டது. (4-405)

## 26 ஆவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும்

விசுவமடு,செப்.27

விசுவமடு வித்தியாலயத்தின் 26ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த 20ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் முல்லை மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் கரைதுறைப்பற்று கோட்டக்கல்விப் பணிப்பாளர், பாரதிவித்தியாலய அதிபர் எனப்பலர் கலந்து கொண்டனர். (4-402)

## முதலுதவிப் பயிற்சி முடித்தோருக்கு சான்றிதழ்

புளியங்குளம்,செப்.27

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவினரால் புளியங்குளம் ஆயப் பகுதியில் கடந்த ஆடி, ஆவணி மாதங்களில் நடதப்பட்ட ஆயப்பகுதிப் பணியாளர்களுக்கான முதலுதவிப் பயிற்சிநெறியை நிறைவுசெய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இம்மாதம் நடுப்பகுதியில் புளியங்குளத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஆயப்பகுதியின் புளியங்குளப் பகுதி மேலாளரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வன்னிப் பகுதிக்கான சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் ஆணையாளர் வே.சிறிதரன், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பகுதித் திட்ட இணைப்பாளர், திட்ட உத்தியோகத்தர்கள்,தொண்டர்கள் ஆகியோரும், ஆயப் பகுதிப் பணிப்பாளர், பொறுப்பாளர்கள், மேலாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் முதலுதவிப்பெட்டியும் வழங்கப்பட்டது. (4)

# வீட்டுத்திட்ட பயனாளிகள் ஒட்டுசுட்டானில் தெரிவு

ஒட்டுசுட்டான்,செப்.27

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள மக்களுக்கான 2005 - 2006ஆம் ஆண்டிற்கான வீட்டுத்திட்டங்களின் பயனாளிகள் தெரிவு நடைபெற்று வருகின்றது.

ஏற்கனவே கற்சிலைமடு கிராமசேவை அலுவலர் பிரிவில் 2005ஆம் ஆண்டிற்கு 35 வீடுகளும், 2006 ஆம் ஆண்டிற்கு 27 வீடுகளும் ஒட்டுசுட்டான் கிராமசேவை அலுவலர் பிரிவில் 2005 ஆம் ஆண்டிற்கு 25 வீடுகளும், 2006 ஆம் ஆண்டிற்கு 16 வீடுகளுக்குமான தெரிவுகள் இதுவரை நடைபெற்றுள்ளன.

தற்போது தொடர்ந்து ஏனைய பிரிவுகளில் தெரிவுகள் நடைபெறுகின்றன. (4-341-201)

## முள்ளியவளை ம.வியை தரமுயர்த்தக் கோரிக்கை

புதுக்குடியிருப்பு,செப்.27

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியை தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்துமாறு முள்ளியவளைப் பிரதேச மக்கள் கரை துறைப்பற்று பிரதேச செயலாளருக்கும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத் தினத்துக்கும் மகஜர் ஒன்றினைக் கையளித் துள்ளனர்.

கடந்த வாரம் வித்தியானந்தாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாகவே இந்த மகஜர் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (4-353)

# கௌதாரிமுனையில் ஆரம்ப சுகாதார நிலையம்



கௌதாரிமுனையில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது. சுமார் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வேலைகள் நிறைவுபெறும் தறுவாயில் காணப்படுகின்றது.

இச்சுகாதார நிலையம் திறக்கப்பட்டதும் கௌதாரிமுனை, கல்முனை, வினாசியோடை போனற கிராமங்களைச் சேர்ந்த சுமார் 200 குடும்பங்கள் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தின் மூலம் பயன் பெறவுள்ளன.

இந்த ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு சில மாதங்களில் திறந்துவைக்கப்பட்டு ஆரம்ப சுகாதார சிகிச்சைகள் நடைபெறும் என கௌதாரிமுனைக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

*(படம்: பூநகரிச் செய்தியாளர்)*

## பாடசாலைக்கூரை வேயப்படாததால் மழையில் மாணவர் அவதி

விசுவமடு,செப்.27

கண்டாவளைக் கோட்டத்தில் உள்ள புன்னை நீராவி வித்தியாலயக் கட்டடத்தின் கூரைகள் வேயப்படாத நிலையில் உள்ளன.

இதனால், மாணவர்கள் கல்விச்செயற்பாடுகளை மேற்கொள்வதில் பலத்த சிரமத்தை எதிர்நோக்கிவருகின்றனர்.

இந்தப் பாடசாலைக்கு கடந்த ஆண்டில் 'நிக்கொட்' நிறுவனத்தின் பாடசாலைக் கட்டடங்கள் அமைத்துக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றும் மண்டபம் ஒன்றும் நிர்மானிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது இதன் வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால், மாணவர்கள் முன்பிருந்த ஓலைக்கொட்டகையில் கல்வி கற்றுவருகின்றனர். தற்போது பருவ மழைபெய்ய ஆரம்பித்துள்ள நிலையில் வேயப்படாத கூரைகளால் மழை நீர் ஒழுகி வகுப்பறைகள் சேதமாகியுள்ளன.

இதனால், கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ள முடியாதுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. (4-404)

THE HALO TRUST

# தேவை
## டீசல் வாகனத் திருத்துநர்

தகைமைகள்:
- 45வயதிற்குக் குறைவானவர்கள்.
- செல்லுபடியான வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் உடையவர்கள்.
- 5 வருடத்திற்குக் குறையாத டீசல் வாகனம் திருத்துவதில் அனுபவம் உடையவர்கள்.
- மின் ஒட்டுநர் திறமையும் "DC" வாகன மின்வேலைத் திறமைகளும் சிறப்புத் தகைமைகளாகக் கொள்ளப்படும்.

சுயவிபரக்கோவையை 7 நாள்களுக்குள் அனுப்பவும்.

**தலைமை வாகனத்திருத்துநர்,**
**த ஹேலோ டிரஸ்ட்,**
655, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/37813)(42-14-44-26)


## ஹெய்ட்டிக்கு இலங்கைப் படைகள்

கொழும்பு,செப்.27

ஐக்கிய நாடுகள் சமாதானப் படையில் இணைந்துகொள்ளும் இராணுவக் குழுவொன்று நேற்றுமுன்தினம் இலங்கையிலிருந்து புறப் பட்டுள்ளது.

ஹெய்ட்டிக் குடியரசின் சமாதான நடவடிக் கைகளில் ஈடுபடவுள்ள இந்தக் குழுவில் 150 பேர்வரை உள்வாங்கப்பட்டுள்ளனர் என்று தெரி விக்கப்படுகிறது.

இந்தக் குழுவினர் இங்கிருந்து புறப்படுவ தற்கு முன்னதாகக் கட்டுநாயக்கா விமான நிலை யத்தில் இராணுவத் தளபதி தலைமையில் விசேட வைபவம் ஒன்று நடைபெற்றது.

(ஐ-13-6)

## நூல் வெளியீட்டு விழா நாளை

யாழ்ப்பாணம்,செப்.27

சங்கீத கலாவித்தகர் சி.சிவானந்தராஜாவின் 'ஈழத்துக் கலைத்துறைப் பதிவுகள்' நூல் வெளியீட்டுவிழா வடஇலங்கை சங்கீத சபை யின் ஆதரவுடன் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல் லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளரும் வட இலங்கை சங்கீத சபைத் தலைவருமான பவித் னேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பேராசிரியர் சபா.ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(எ-201)

## பஸ்நிலையம் இன்றி பயணிகள் சிரமம்

குடத்தனை,செப்.27

அம்பன், குடத்தனை, மணற்காட்டுச் சந்தி, விளாங்காடு ஆகிய பகுதிகளில் பயணிகள் பஸ்தரிப்பு நிலையம் இல்லை. இதனால் மக் கள் வெயிலிலும் மழையிலும் தவிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து அம்பன் வரை யான பஸ்சேவை சீராக நடைபெற்ற போதி லும் பஸ்தரிப்பு நிலையங்கள் இல்லாததால் பயணிகள் பெரும்சிரமங்களை எதிர்நோக்கி யுள்ளனர்.

(4-78)

## மணிக்கூட்டுக் கோபுரம் இன்று திறப்பு

மானிப்பாய்,செப்.27

மருதனார்மடம் சந்தியில் இராமநாதன் கல்லூரி வளாக எல்லையில் புதிதாக அமைக கப்பட்டுள்ள மணிக்கூட்டுக்கோபுரம் இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவர் சி.சுவாமிநாதன் இதனைத் திறந்து வைப்பார்.

(4-90)

## கட்டாக்காலி நாய்களால் வீதிகளில் தொல்லை

செம்பியன்பற்று,செப்.27

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி சந்தி தொடக்கம் உடுத்துறை வரையான பகுதி களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

கூட்டம் கூட்டமாக நிற்கும் நாய்கள் சைக் கிள், மோட்டார் சைக்கிளில் பயணம் செய் வோரையும் வாகனங்களில் செல்வோரையும் கலைத்து வருகிறது. வீதி விபத்துக்களும் நேரிட இது ஏதுவாக அமைகிறது.

கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(4-36)

## குடிதண்ணீர்க் கிணற்றைப் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

வட்டுக்கோட்டை, செப்.27

வலி மேற்கில் பொதுமக்களால் தண்ணீர்த் தேவைக்குப் பயன் படுத்தப்பட்டு வந்த பழுதடைந்த நன் னீர்க் கிணற்றினைத் திருத்தம் செய்வ தற்குச் சமுர்த்தி மக் கள் கருத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வலி.மேற்கு பிர தேச செயலர் பிரி வில் வட்டுக்கோட்டை வடக்கு கிராம அலு வலர் பிரிவில் உள்ள நன்னீர் கிணறு அறு பதனாயிரம் ரூபா செல வில் புனரமைக்கப் படவுள்ளது.

இதற்கான நிதி ஒதுக்கீடு சமுர்த்தி அதிகார சபையினால் யாழ். செயலகம் மூலம் பிரதேச செயல கத்திற்கு அனுப்பி வைக் கப் பட் டுள் ளது.

(எ-161)


## கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்க பணியாளர் திரு.அ.யூலியஸ் ஜெயரட்னம் அவர்களின் அன்புத் தந்தையார்

**க.அந்தோனிமுத்து**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னா ரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்க ஊழியர் நலன்புரிச்சங்கம்.

(சி-37840) (26-14-44)



## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 30 - 08 - 1926



அம்பாள் அடியில் 14 - 10 - 1997

திதி: 27-09-2004

எழுதுமட்டுவாழ் சிவநெறிச் செல்வரும் அரசமரக்கூட்டுத்தாபன ஒப்பந்தகாரரும் முகமாலை, மிருசுவில் கிராமசபைத் தலைவரும் விழுபளை அம்பாள் பரிபாலன சபைத் தலைவரும் திருமதி நாகம்மாவின் தர்ம பர்த்தாவுமாகிய

மேதக்க **கந்தையா குலசேகரம்பிள்ளை J.P.**

அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவலைகள்.

ஏழு ஆண்டுகள் என்ன என்ன எழுந்த நினைவலைகள்
நீளுதய்யா! நினைவுகளை நிறுத்துமுடியவில்லை!
ஆண்ட அரசே உமை ஆண்டு அனுபவித்த மனைவி, மக்கள் நாம்
வேண்டுகிறோம் விழுபளையாள் பாதங்களை அவை வேந்தனுமே சேர்ந்திடவே!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

எழுதுமட்டுவாழ்,
கற்போது உரும்பிராய். (36880) (26-14-44) - குடும்பத்தினர்.



## புதிய பணிமனை திறப்பு விழா

யாழ்.சாலை பரந்தனில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள வடபிராந்திய பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பணிமனை எதிர்வரும் 2004-10-02 ஆம் நாள் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இவ்வைபவத்தில் சங்கத்தில் உறுப்புரிமை பெற்றுள்ள உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்கள் அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பணிப்பாளர் சபை, பணியாளர்கள்,
**வ.பி.பா.ஊ.உ.ரி.கூ.சங்கம்,**
**பரந்தன், கிளிநொச்சி.**

(சி-37827) (26-14-44)



## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 17 - 07 - 1921



விண்ணில் 27 - 09 - 2002

திருமதி **அருளம்மா எட்வேட்**

விண்ணுலகம் நீர் சேர்ந்து
ஈராண்டு ஆனதம்மா!
உம் பிரிவால் கண் கலங்கி
எம் உள்ளம் பதறுகின்றது!
பரிதவிக்கும் எம்மவர்க்காய்
இறைவனடி மன்றாடும்...

56/4, பாண்டியன்தாழ்வு,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (24-14-44-26)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

(36696)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1916 - 10 - 15



இறைவன் திருவடியில் 2002 - 09 - 20

திருமதி **சின்னம்மா கதிர்காமு**

திதி: 27.09.2004

ஆண்டுகள் இரண்டானாலும்
ஆறுமோ எம் துயரம்?
மீண்டும் எப்போது அம்மா
உங்கள் அன்பு முகம் காண்போம்?
ஆலமரமது போல் நிழல் தந்த அம்மாவே!
அலைமோதிக் கரை ஒதுங்கி கலங்கி அழுகின்றோம்
அரவணைக்க நீவீர் வரும்நாள் எந்நாளோ?

சாமியன் அரசடி,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (36566) (24-14-44-26)

மகன்கள், மகள்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
க.பரஞ்சோதி (மகன்).



## ஆறாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணிலே மலர்ந்தது 28 - 08 - 1972



மண்ணுக்காய் நிறைந்தது 27 - 09 - 1998

# கப்டன் நிருபா / வினி
## (மகாதேவன் தர்சினி)

- ஓயாத அலைகள் - 02 -

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி – A/L 1991)

இலட்சியங்கள் நிலைத்திட்ட
இளநகையாள் நிருபாவே!
மலர்ச்சி தந்த முகமுந்தன்
மறந்திடாத எம் நினைவில்
வலத்தில் வந்து செல்வதில்
ஆண்டாறு முடிந்தாச்சு
நலத்தில் குறைந்து நாம்மடிந்து
நாளில் நாம் போனாலும் நாமறவோம் உன்னை!

"லக்ஸ்மண வில்லா"
ஜெயந்தி என்டப்பிரைஸஸ்,
சந்தை வீதி, ஆவரங்கால், புத்தூர்.

பப்பா, அம்மா,
தங்கை பிரசாந்தி.

(36871) (24-14-44-26)



## நெஞ்சைவிட்டு நீங்காத நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு நினைவு

தோற்றம் 25 - 01 - 1925



மறைவு 08 - 10 - 2003

அமரர்
**சின்னவன் இளையகுட்டி**

12ஆம் ஆண்டு நினைவு

தோற்றம் 04 - 05 - 1930



மறைவு 21 - 09 - 1992

திருமதி
**இளையகுட்டி வெள்ளைப்பிள்ளை**

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து
வையத்துள் நாம் வாழ வழி காட்டிய எம் தெய்வங்களே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம்நெஞ்சங்களில்
இருந்து என்றும் உங்கள் நினைவுகள் மறையவே மறையாது!


இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி. (36685) (26-14-44)

- பிள்ளைகள்.

# கனடா பொங்குதமிழ் நிகழ்வுகள்




சந்நிதி முருகனின் ஆசியுடன் தலைவர் பிரபாவின் 'கட்டவுட்'



பொங்குதமிழ் கோஷம் எழுப்புகின்றனர்.






மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.



கனடா நாடாளுமன்றக் கட்டடத்தில் தமிழீழத் தேசியக்கொடி.



சிறுவர் முதல் வயோதிபர்வரை எழுச்சியுடன் பங்கேற்பு.



ஏற்பாட்டாளர் உரை.



தலைவரின் படத்துடன் மக்கள் கூட்டம்

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான இரண்டு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள் 35/-, பேட்டுக் குஞ்சு 50/- 27.09.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக் கிளையிலும், சூட்டிபாம் - வட்டுக்கோட்டை, R.S.K பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் - திருநெல்வேலி, முருகன்- சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (36573)

## விற்பனைக்கு

CB 125, LML II, HIACE வான் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு 241, பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம். (36846)

கோப்பாய் VCக்கு அண்மையில் 2 பரப்புக் காணியுடன் புதிய வீடும், மாதா கோயில் ஒழுங்கையில் 17 பரப்புக் காணியுடன் கூடிய இரண்டு வீடுகளும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: 109, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 021 222 2132 (36895)

## காணவில்லை

பட்டிக்கொம்புடைய கறுப்பு நிற கன்றுத்தாச்சி மாடு ஒன்றை 15.09.2004 ஆம் திகதியில் இருந்து காணவில்லை. இது பற்றித் தகவல் தெரிவிப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு 446, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, நல்லூர். T.P.: 077 6408146 (36868)

## மணமகள் தேவை

யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975இல் பிறந்த, சதயம் நட்சத்திரம், கிரகபாவம் 19¾, 8இல் செவ்வாய் குருவும் உள்ள சைவபோசன எலக்ரோனிக் எஞ்சினியருக்குத் தகுந்த, படித்த மணமகள் தேவை. தொடர்பு: T.P.: 222 2711 (36866)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரசாங்க அதிகாரியாகக் கடமையாற்றும், 32 வயதுடைய பட்டதாரிக்கு (அனுசம், 13 கிரகபாவம், 5 அடி 3") செவ்வாய்க்குற்றமற்ற மணமகனுக்கு அழகிய பெண் தேவை. மணமகள் அரசாங்க அலுவலராக இருத்தல்வேண்டும். உடன் தொடர்புகொள்க. விளம்பர இல.: 2391, மே/பா. உதயன். (சி-37841)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி தினமும் விற்பனைக்குண்டு. மற்றும் பொதி செய்யப்பட்ட (ஐஸ்) கோழியும் விற்பனைக்குண்டு. மலிவு விலையில் வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு: T.கரன், 150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (35855)

## தவறிவிட்டது

செ.சாமிநாதர் என்பவரது தே.அ.அட்டை (450221732V), சாரதி அனுமதி அட்டை, வாகன ஆவணங்கள், கொமர்ஷல் வங்கிப் புத்தகம் ஆகியன அடங்கிய கறுப்பு நிற சிறிய கைப்பையொன்று ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதிக்கிடையில் 23.09.2004 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம், 303, K.K.S. றோட், யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொண்டு உரிய சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளவும். (36861)

## வடமராட்சி கிழக்கில் நுளம்பு வலைகள் விநியோகம்

செம்பியன்பற்று,செப்.27

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கென யாழ்ப்பாண லயன்ஸ் கழகம் சுமார் 2ஆயிரத்து 500 நுளம்பு வலைகளை வழங்கியுள்ளது.

செம்பியன்பற்று உடுத்துறை பகுதிப் பரிசோதகர்கள் சுகாதாரத் தொண்டர்களின் உதவியுடன் நுளம்பு வலைகளை வழங்கி வருகின்றனர். (4-36)


## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்

Domain Registration, Hosting, Designing, Maintenace and e-mails

ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.

SAAMSTECH

841, Hospital Road, Jaffna.

Phone: 0773 068968.

(சீ-37842)

## SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு

காலம்: 2 மாதங்கள்

கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.

SAAMSTECH

841, Hospital Rd., Jaffna

Phone: 0773 068968

(சீ-37511)


## கரையோர மீன்பிடி குறித்து மீனவருக்குப் பயிற்சி

செம்பியன்பற்று,செப்.28

உலக உணவுத் திட்டத்தின்கீழ் குடாநாட்டைச் சேர்ந்த மீனவர்களுக்குக் கரையோர மீன்பிடி தொடர்பாகப் பயிற்சி வழங்க ஆலோசிக்கப்பட்டு வருவதாக நீரியல்வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு, வடக்குப் பகுதிகளிலிருந்து தெரிவுசெய்யப்படும் தலா மூன்று மீனவர்களுக்கே இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடு ஒன்றிற்குக் கூட்டிச்சென்று அங்கு வைத்தே மீன்பிடி மற்றும் மீன்பிடி படகுகள் தொடர்பான பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (4-36)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 13 - 06 - 1982



ஆண்டவன் அடியில் 01 - 07 - 2004

**அமரர் கிருஷ்ணன் கோகிலவதன் (வதன்)**

இன்று (27-09-2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'கலை ஒளி',*
*சிறுப்பிட்டி தெற்கு,*
*நீர்வேலி.* (36897) (26-11-45-24) - குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பு சிறிதரன்

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு சிறிதரன் 24.09.2004 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் சின்னப்பு - மரியசீலி சின்னப்பு ஆகியோரின் அன்பு மகனும் சுவர்ணாவின் அன்புக் கணவரும் திரு.திருமதி அப்புத்துரை சிவலிங்கம் - மோகனா தம்பதிகளின் அன்பு மருமகனும் சிறிசுபஸ்ரீனாமேரி, சிறிமேரி சுதர்சிகா, சிறிசுகிர்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறிபவானி சகாயநாயகம் (மன்னார்), சிறிகைலாஜினி சகாயறாஜா (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சிறிறஜனி யோசப் அன்ரனி (நீர்கொழும்பு), சிறிசுதர்சினி (பிரான்ஸ்), சிறிசுதாகரன் (ஆசிரியர், புனித சாள்ஸ் ம.வி.) சிறிமைதிலி (ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மடத்தீஸ் முத்தையாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற இம்மனுவேல், வசந்தி ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.10.2004 அன்று பிரான்ஸில் நடைபெறும. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*100, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.* (36889)(39-14-44-24)

தகவல்: சகோதரர்கள்.

## பேரம்பலம் சண்முகரெத்தினம்

வேலணை, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நாரந்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் சண்முகரெத்தினம் 25.09.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அன்னலெட்சுமி மயில்வாகனம், பராசக்தி, சரஸ்வதி மற்றும் சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற சுப்பையா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற செல்லத்துரை, தெய்வானைப் பிள்ளை, செல்லப்பா மற்றும் இரத்தினம், ஜெயலெட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2004) திங்கட்கிழமை காலை 10மணிக்கு வேலணை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

*5ஆம் வட்டாரம்,*
*வேலணை.*
(36890)(39-14-44-24)

தகவல்:
சகோதரர் - பே.சிவசுப்பிரமணியம்,
மைத்துனர் - இ.இரத்தினம்.

## பேதுருப்பிள்ளை அமிர்தநாதர்

(அந்தோனிப்பிள்ளை - மண்டைதீவு)



மண்டைதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.03, சின்னக்கடை வீதி, குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட பேதுருப்பிள்ளை அமிர்தநாதர் (அந்தோனிப்பிள்ளை) 25.09.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை - தாயாபரி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற மடுத்தீனுப்பிள்ளை - பிரகாசியம்மாவின் மருமகனும் கிளாறம்மா (ஞானமலரின்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற மெலிற்றன் ஜெகநாதன், காலஞ்சென்ற றாஜேஸ்வரன், மேரி எமிலா, மைக்கல் ஜோசப் (உரிமையாளர் - முல்லை அச்சகம்), மேரி கொன்சலா, மேரி அன்சலா, காலஞ்சென்ற (லெப்.மடந்தை - மாவீரர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அஸனின் அன்பு மாமனாரும் கஸ்னாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான லூர்த்தம்மா, ஆனாப்பிள்ளை, காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை (அப்பையா), காலஞ்சென்ற அகுஸ்தீனுப்பிள்ளை (திரவியம), கிறகோரி (செல்லத்துரை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நட்சத்திரம், காலஞ்சென்ற சின்னப்பு, மேரிப்பிள்ளை, பெனடிற்றம்மா, புஸ்பமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (27.09.2004) திங்கட்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.03, சின்னக்கடை வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*
(36892) (43-14-44-24)

தகவல்:
அ.மைக்கல்ஜோசப் (மகன்),
(உரிமையாளர் முல்லை அச்சகம்),
யாழ்ப்பாணம்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 615 |
| திகதி | 24-09-2004 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல. 5928208-5942896

வெற்றி இலக்கங்கள் 41 49 52 55

லக்கினம் கடகம்

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்பட்டுள்ளது

இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,20,299 | 10/- | 32,02,990/- |
| 2.இலக்கங்கள் | 29,360 | 20/- | 5,87,200/- |
| 1.இல + லக்கினம் | 29,062 | 30/- | 8,71,860/- |
| 2.இல + லக்கினம் | 2,710 | 100/- | 2,71,000/- |
| 3.இலக்கங்கள் | 788 | 500/- | 3,94,000/- |
| 3.இல + லக்கினம் | 70 | 5,000/- | 3,50,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இல + லக்கினம் | 1 | 10,00,000/- | 10,00,000/- |
| மொத்தம் | 3,82,298 | - | 81,07,300/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 81,07,300/-

தொடர் இல. 4969386 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 28ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5938167-6-15
5933698-4-70
5933213-0-92
5935647-6-08
5936247-0-32

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3805605 இலிருந்து 3821540 வரை

சீட்டிழுப்பு இல. 1542
திகதி 25.09.2004

வெற்றி எண்கள் 07 17 27 35 37

போனஸ் எண் 19

ஜக்பொட் பரிசு ரூபா.15,00,000/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | 1 | 15,00,000/- | 15,00,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 2 | 1,00,000/- | 2,00,000/- |
| 4 | 95 | 10,000/- | 9,50,000/- |
| 3 | 5,017 | 500/- | 25,08,500/- |
| 2 | 83,577 | 20/- | 16,71,540/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த இலக்கம் - 07 (போனஸ் எண் தவிர்ந்து) | 1,02,279 | 10/- | 10,22,790/- |

இந்த புதன்கிழமை ஜக்பொட் வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 83,52,830/-

Rs. 15,00,000/-

தொடர் இல. 2873591-க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 29 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3819976-8-79
3805960-6-67
3807444-9-53
3810675-9-95
3809540-4-56


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 25 – 10 – 1960



உதிர்வு 28 – 08 – 2004

**அமரர் விஜயநாதன் விக்கினேஸ்வரராசா**

*(வீமன்காமம், தெல்லிப்பழை – லங்கா சிமெந்து லிமிடெட் உத்தியோகத்தர்)*

இன்று (27.09.2004) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*களவாவோடை,*
*ஏழாலை தெற்கு,*
*சுன்னாகம்.* (36896) (43-14-44-24)

அன்பு மனைவி, பிள்ளைகள்.

# மினி உலகக்கோப்பைக் கிரிக்கெட்டில் கிண்ணத்தைச் சுவீகரித்தது மேற்கிந்தியா

லண்டன்,செப்.27

கடந்த இருவாரங்களுக்குமேலாக பரபரப்பாக நடந்துவந்த மினி உலகக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மேற்கிந்திய




சதத்தைப்பூர்த்தி செய்த மகிழ்ச்சியில் மார்க்கஸ் கிறஸ்கோரிக்.

அணி வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தைத் தட்டிக்கொண்டது.

கடந்த 10 ஆம் திகதி முதல் இங்கிலாந்தில் இடம்பெறறு வந்த மினி உலகக்கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், இங்கிலாந்து, இந்தியா, கென்யா, நியூஸிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை, அமெரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள் மற்றும் சிம்பாப்வே ஆகிய 12 நாடுகளின் அணிகள் பங்குபற்றின.

இவற்றில் கடந்த உலக சம்பியனான ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து, பாகிஸ்தான் மேற்கிந்தியத்தீவு அணிகள் அரை இறுதிக்குத் தெரிவுசெய்யப்பட்டன.

அரையிறுதி ஆட்டங்களில் இங்கிலாந்து அணி ஆஸ்திரேலிய அணியை 6 விக்கெட்டுக்களால் தோற்கடித்ததன் மூலமும் மேற்கிந்திய அணி பாகிஸ்தானை 7 விக்கெட்டுக்களால் தோற்கடித்ததன் மூலமும் இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றிருந்தன. இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பரபரப்பான இறுதியாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியும் இங்கிலாந்து அணியும் மோதின. இரண்டு விக்கெட்டுக்களால் இங்கிலாந்தைத் தோற்கடித்ததன் மூலம் கிண்ணத்தை சுவீகரித்தது மேற்கிந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் பிறைன் லாரா இங்கிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தார்.

இதனை அடுத்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி வீரர்களை மேற்கிந்தியப்பந்து வீச்சாளர்கள் ஆரம்பம் முதலே அச்சுறுத்தினர். அந்த அணி சார்பாக மார்க் கிறிஸ் கோதிக், விக்ரம் சோலங்கி ஆகியோர் களமிறங்கினர். அணி 12 ஓட்டங்களைப் பெற்றபோது சோலங்கி 4 ஓட்டங்களுடன் களத்தை விட்டு வெளியேறினார்.


தொடர்ந்து களமிறங்கிய இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் எவரையும் நிலைத்து நின்று ஓட்டங்களைக் குவிக்க மேற்கிந்திய பந்து வீச்சாளர்கள் விடவில்லை. ஒரு பக்கம்




மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குக்காரணமாக இருந்த பின்னித்துடுப்பாட்ட வீரர்கள் வெற்றியைக் கொண்டாடுகின்றனர்.

மளமளவென விக்கெட்டுக்கள் சரிந்தபோதும், மறுமுனையில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய கிறஸ்கோரிக் ஓட்டங்களைக் குவித்து அணியைச் கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் 49.4 ஓவர்களில் இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

அவ்வணி சார்பாகச் கிறஸ்கோதிக் 104



வெற்றிக்கிண்ணத்துடன் மேற்கிந்திய அணித் தலைவர்.

ஓட்டங்களையும், ஸ்டைரிஸ் 18 ஓட்டங்களையும், கோலிங் வூட் 16 ஓட்டங்களையும் கைல்ஸ் 31 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

பந்து வீச்சு சார்பாக ஹைறன்ஸ் 3 விக்கெட்டுக்களையும், பிராட்கோ 2 விக்கெட்டுக்களையும், பிராவோ, கைல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 218 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி




மேற்கிந்திய அணித்தலைவர் லாராவன் ஆட்டமிழப்பைக் கொண்டாடும் இங்கிலாந்து வீரர்கள்.

யும் ஆரம்பத்தில் தடுமாறியது. அவ்வணியின் முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களும் சொற்ப ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரு கட்டத்தில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவும் நிலையில் இருந்தது. இந்த நிலையில், 9 விக்கெட்டின் இணைப்பாட்டக்காரர்களாகக் களமிறங்கிய விக்கெட் காப்பாளர் பிரௌனி மற்றும் பந்து வீச்சாளர் பிராட்சோ ஆகிய இருவரும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி மேலதிக விக்கெட்டுக்கள் எதனையும் இழக்காது வெற்றி இலககை அடைந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கைல் 23 ஓட்டங்களையும் லாரா 14 ஓட்டங்களையும், சந்திரபோல் 47 ஓட்டங்களையும் அணியின் வெற்றிக்காக இறுதிவரை களத்திலிருந்த பிரௌனி 35 ஓட்டங்களையும் பிராட்சோ 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சுச் சார்பாக அன்ரூ பிளின்ரொப் 3 விக்கெட்டுக்களையும், ஹர்மிசன் ஹொலிங் வூட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

நேற்றைய இறுதியாட்டத்தின் ஆட்டநாயகனாக மேற்கிந்தியத்தீவுகள் அணியைச் சேர்ந்த பிராட்சோ தெரிவானார். தொடர் ஆட்ட நாயகனாக அதே அணியைச் சேர்ந்த சர்வான் தெரிவுசெய்யப்பட்டார். (3-5)

# ரி.எஸ்.எஸ்.ஏ. கிண்ணத்தை கம்பர்மலை அணி சுவீகரித்தது

லண்டன் தமிழ்ப்பாடசாலைகள் விளையாட்டுச்சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற விளையாட்டு விழாவில் கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் அணி ரி.எஸ்.எஸ்.ஏ. கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

அண்மையில் லண்டனில் நடைபெற்ற சவுத்தோல்வரன் விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்விளையாட்டு விழாவில் கிரிக்கெட், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் மற்றும் சிறுவர் விளையாட்டு நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன.

முதலில் நடைபெற்ற வயதெல்லை அற்றோருக்கான கிரிக்கெட் போட்டியில் கொம்மாந்துறை கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் அணி வல்லை சிதம்பராக்கல்லூரி பழைய மாணவர் அணியைத் தோற்கடித்து ரி.எஸ்.எஸ்.ஏ கிண்ணத்தை தனதாக்கியது.

இதில் சிறந்த துடுப்பாட்ட வீரராக கம்பர்மலை வித்தியாலயத்தைச் சேர்ந்த கோபியும், சிறந்த பந்துவீச்சாளராக சிதம்பராக்கல்லூரியைச் சேர்ந்த ராஜனும், ஆட்டநாயகனாகக் கம்பர்மலை வித்தியாலயத்தைச் சேர்ந்த நவாஸும் தெரிவு செய்யப்பட்டனர். (எ-5)

# யாழ்ப்பாணத்திலிருந்து சமாதான மரதன் ஓட்டம்

வலி.வடக்கு,செப்.27

ஆசியா - ஜேர்மன் விளையாட்டு பரிமாற்றுத் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமாதான ஓட்டப்போட்டிக்கான ஆரம்ப நிகழ்வுகள் கடந்த வெள்ளியன்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன.

சமாதான ஓட்டத்தில் கலந்துகொண்ட வீரர்கள் மற்றும் பிரதமவிருந்தினர்களுக்கு முன்னோடியாக வேம்படி மகளிர் பாடசாலை மாணவிகளின் தமிழர் கலாசார நிகழ்வான வேப்பிலைக் கரகாட்டம் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பற்றிக்நிரஞ்சன், உடுவில் பிரதேச செயலாளர் எஸ்.கிருபாகரன் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் ஆஸ்ரின் ஞானப்பிரகாசம், யாழ.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை உட்பட அனைவரும் யாழ். மத்திய கல்லூரி மாணவரின் பாண்ட் வாத்தியத்துடன் தந்தை செல்வா நினைவாலயத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள் வீதியின் இருமருங்கிலும் அணிவகுத்து நிற்க, யாழ். அரச அதிபர் வெற்றிக்கொடியினை அசைத்து ஓட்டப்போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு பெண் வீராங்கனைகள் உட்பட முப்பதிற்கும் மேற்பட்டவர்கள் இவ் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்தச் சமாதான ஓட்டப்போட்டியானது கடந்த வெள்ளியன்று இலங்கையின் பன்னிரண்டு மாவட்டங்களில் இருந்து ஆரம்பமாகியது. (எ-86)

# வலைப்பந்தாட்ட இறுதியாட்டம்


யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் நடத்திவரும் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவிருக்கின்றது.

இந்த ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

- பி.ப.3 மணி - யுத்காமல் வி.க. எதிர் அரியாலை ஐக்கிய வி.க.
- கலப்பு அணியின் ஆட்டம் 4.30 மணிக்கு - யூனியன் விளையாட்டுக்கழகம் எதிர் யாழ். பல்கலைக்கழகம்.

இந்த நிகழ்வில் முன்னாள் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கே.பாப்பா, பண்டத்தரிப்பு பெண்கள் கல்லூரி அதிபர் திருமதி கே.சிவராஜா, பொஸ்கோ புத்தகசாலை உரிமையாளர் எம்.எஸ்.சந்திரபோஸ், யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (3-201)



ஆசிய ஜேர்மன் விளையாட்டுப் பரிமாற்றுத்திட்டத்தின் கீழ் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் சமாதான ஓட்டத்தில் கலந்துகொள்ளும் வீர, வீராங்கனைகள் அணிவகுத்து நிற்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாண அரச அதிபரும் ஏனையவர்களும் பாண்ட் வாத்திய அணியுடன் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினர், தந்தை செல்வா நினைவுத்தூபி முன் சமாதான ஓட்டத்தை ஆரம்பித்து, வைப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: வலி.வடக்கு செய்தியாளர்.)

# சாட்டி தொல்லியல் ஆய்வில் மீண்டும் பல மனித எலும்புக் கூடுகள் மீட்பு!

தீவகம் சாட்டியில் தொடர்ச்சியாக தொலலியல் அகழ்வாய்வை மேற்கொண்டுவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ப.புஷ்பரட்ணம் தலைமையிலான முதலாம், இரண்டாம் வருடத் தொல்லியல் கற்கைநெறி மாணவர்கள் குழு "E" எனப் பெயரிடப்பட்ட இன்னொரு புதிய தொல்லியல் மையத்தில் இற்றைக்கு 2 ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்டதெனக் கூறக்கூடிய மனித எலும்புக்கூடுகளை மீண்டும் கண்டுபிடித்துள்ளனர்.

இது தொடர்பாக கலாநிதி புஷ்பரட்ணம் கருத்துத் தெரிவிக்கையில்:


எலும்புக்குகூடுகள் கிடைத்த ஆய்வுக்குழி

ஏனைய தொல்லியல் மையங்களைப் போல் இங்கிருந்த ஈமச்சின்னம் பாறையில் அமைக்கபபட்டிருந்தாலும் இந்த எலும்புக் கூடுகள் 10 அடிக்கு மேற்பட்ட ஆழம் கொண்ட பாறையின் குழியில் புதைக்கப்பட்டிருந்ததால் நீரை அகற்றியே பல சிரமத்தின் மத்தியில் அங்கிருநத பொருள்களை அகற்றவேண்டியிருந்தது.


ஆய்வு குறித்து கலாநிதி ப.புஷ்பரட்ணத்துடன் யாழ். அரச அதிபர் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று வினவும் காட்சி.

தொடர்ந்தும் பலவகையான பொருள்கள் கிடைத்த வண்ணம் இருப்பதால், இந்த இடத்திற்குரிய அகழ்வை இன்னும் இரண்டு மூன்று நாள்களுக்குத் தொடரவேண்டியுள்ளது.

ஆயினும், மூன்று நாள்களாக இந்த இடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பல வகைப்பட்ட எலும்புகள், பலவகை மட்பாண்டங்கள், பெறுமதியான கற்கள், 2ஆயிரத்து 300 வருடங்களுக்கு முற்பட்ட எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள், சங்கு, சிப்பி, மான்கொம்புகள், கடலுணவு எச்சங்கள், இரும்புக் கருவிகள் போன்ற அரிய பல பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வாய்வைப் பேராசிரியர் வி.சிவசாமி, வரலாற்றுத்துறைத் . தலைவர் பேராசிரியர் ச.சத்தியசீலன் பார்வையிட்டு எம்மை ஊக்கப்படுத்தினர். அத்துடன், யாழ். அரச அதிபர் செபத்மநாதனும், அவரது செயலக உத்தியோகத்தர்களும் இரு நாள்கள் வருகை தந்து பலமணிநேரம் தங்கியிருந்து நாம் மேற்கொண்டு வரும் அகழ்வாய்வை நேரில் பார்வையிட்டதுடன், ஆய்வில் பங்கெடுப்போர் நிழலில் இருந்து ஆய்வை மேற்கொள்வதற்கு பல வசதிகளுடன் கூடிய கூடாரங்களையும் தமது செயலகத்தின் பேரில் அமைத்துக் கொடுத்தமை மாணவர்களுக்கு ஆர்வத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கிறது - என்றார். (எ-6-7)


மீடகப்பட்ட எலுப்புகள்

## வலி.கிழக்கில் மழையினால் பயிர்களுக்குப் பாதிப்பு

அரியாலை,செப்.27

வலி.கிழக்குப் பிரதேசத்தில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் மழையால் விவசாய செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இப்பிரதேசதோட்டங்களில் பயிரிடப்பட்ட வெங்காயம் மற்றும் மிளகாய் பயிர்கள் தற்போது பெய்து வரும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

வெங்காயத்தின் அறுவடை நடக்கும் இந்த நேரத்தில் மழை விட்டு விட்டுப் பெய்வதால் வெங்காயப் பயிர்கள் அழுகி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். (4-17)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,செப்.27

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா கடந்த 19ஆம் திகதி ஞாயிறுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு தேர்த்திருவிழாவும், 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ-204)

★ ★ ★

சாவகச்சேரி,செப்.27

சாவகச்சேரி நகர் செருக்கல்பதி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று திங்கள் காலை 9மணிக்கு நடைபெறுகின்றது.

தீர்த்தத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ஆலய பிரதமகுரு கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (ஐ-31)

## யோகாசன வகுப்பில் புதிய பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.27

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் ஏற்பாடு செய்துள்ள யோகாசன பயிற்சி வகுப்புக்களில் புதிய பிரிவு எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

ஆண்கள், பெண்கள், நோயாளர்களுக்காகத் தனித்தனியே நடைபெறம் இப்பயிற்சி வகுப்பில் பெங்களூர் யோககேந்திர மருத்துவ வளாகத்தின் பாடத்திட்டத்திற்கு அமைவாக பயிற்சி வழங்கப்படும்.

பயிற்சியின் முடிவில் இந்து கலாசாரத் திணைக்களத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்படும். (எ-204)

## கொடிகாமம் நகரின் சுகாதாரத்துக்குக் கேடு

தென்மராட்சி,செப்.27

கொடிகாமம் நகரப்பகுதிச் சுற்றாடல் பொது மக்களால் சுகாதாரக்கேட்டுக்குட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முகமாலை ஊடாக வரும் பயணிகளுக்குக் கேந்திர நிலையமாக உள்ள கொடிகாமம் நகரப்பகுதியில் தங்குவோர் அப்பகுதியில் உள்ள பற்றைகளை இயற்கைக் கடனுக்குப் பயன்படுத்துவதால் சில பகுதிகளுக்குச் செல்ல முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் எரிபொருள் நிலையம் பகுதி கச்சாய் வீதி, கண்டி வீதி போன்ற இடங்களில் இந்நிலை மோசமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (10-117)

### 20 வருடங்களுக்குமுன் கிட்டு - கொத்தலாவலை செய்தது போன்று

# புலிகளுடன் கைதிகள் பரிமாற்றம் செய்வதே இரு ஊர்காவலரையும் விடுவிக்க ஒரே வழி!

### அரசுக்கு மகேஸ்வரன் அறிவுரை

கொழும்பு,செப்.27

புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவலர்களை விடுவிக்க வேண்டுமானால் கைதிகள் பரிமாற்றத்தைத் தவிரவேறு வழியில்லை. இது ஒன்றும் புதிய விடயமல்ல. 20 வருடங்களுக்கு முன்பே நடைமுறைப்படுத்தப்பட்ட விடயம்தான் - என்றார் கொழும்பு மாவட்ட ஐ.தே. கட்சி எம்.பியான தியாகராசா மகேஸ்வரன்.

திருகோணமலை மோமரசங்கடவலப் பகுதியில் புலிகளால் சிறைப் பிடிக்கப்பட்ட இரண்டு ஊர்காவல் படையினரை விடுவிக்கக் கோரும் பிரேரணை ஒன்றை கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளையில் ஜே.வி.பி. உறுப்பினரான ஜயந்த விஜேசேகர சமர்ப்பித்தார்.

இப்பிரேரணை மீது உரையாற்றிய மகேஸ்வரன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

இங்கு பேசிய ஜே.வி.பியினர் இங்குமட்டும் நீதிமன்றமும், நிர்வாகமும் இருப்பதுபோல் கூச்சலிடுகின்றனர். வடக்கு - கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதிமன்றம், பொலீஸ் நிலையம், நிர்வாகச் செயலகம் என்பவற்றுடன் பொலீஸ்மா அதிபரும் இருக்கின்றார். தமிழீழ நிர்வாகம் தனித்தே இயங்கிவருகின்றது என்பதை இவர்கள் மறந்துவிட்டுப் பேசுகின்றனர்.

தமிழர்கள் பலர் இன்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பல வருடங்களாகச் சிறையில் வாடுகின்றனர்.

இப்பொழுது புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவல் படையினரை விடுவிக்க வேண்டுமானால் 20 வருடங்களுக்கு முன் புலிகளின் தளபதி கிட்டுவும், மேஜர் கொத்தலாவலையும் செய்துகொண்டமை போல் கைதிகளைப் பரிமாறிக்கொள்வதுதான் சிறந்த வழி.

இப்பொழுது அரசின் பங்காளராக இருக்கும் ஜே.வி.பியினர் இனவாதம் பேசுவதை விட்டுவிட்டு அமைதிப் பேச்சை ஆரம்பிக்க உதவ வேண்டும்.

அமைச்சர் மங்கள சமரவீர வாய்சவடால் விடுகின்றார். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட 45 ஆயிரம் கோடி ரூபாவில் 70 வீதம் கிடைத்து விட்டதாகத் தம்பட்டம் அடிக்கின்றார். இதில் எந்த உண்மையும் இல்லை.

இந்த அரசிற்கும் ஜனாதிபதிக்கும் இந்த 45 ஆயிரம் கோடி ரூபாவில் தான் நோக்கம் இருக்கின்றதேயன்றி நாட்டின் அமைதியில் இல்லை.சர்வதேச மட்டத்தில் இவர்கள் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு நாம் இடம்கொடுக்கமாட்டோம்.

அடுத்த மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் இலங்கை அரசின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துவோம். இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கும்வரை ஒரு சதமேனும் உதவி வழங்கக்கூடாது எனச் சர்வதேச சமூகத்தை வலியுறுத்துவோம் - எனவும் மகேஸ்வரன் கூறினார்.. (ஐ-க)

## 31ஆம் நாள் நினைவலைகள்

| மலர்வு | | மறைவு |
| --- | --- | --- |
| 25 - 10 - 1960 |  | 28 - 08 - 2004 |

அமரர்

### விஜயநாதன் விக்கினேஸ்வரராசா

(விக்கி)

(லங்கா சிமெந்து லிமிட்டட் ஊழியர்)

**எமது சக தொழிலாளியும், எமது தொழிற்சங்க அங்கத்துவரும், சுய விருப்பத்தில் ஓய்வுபெறும் திட்டத்தில் விண்ணப்பிக்காத ஊழியருமான அமரர் வி.விக்கினேஸ்வரராசா (விக்கி) அவர்களின் மறைவு குறித்து துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னார் எமது தொழிற்சங்க நடவடிக்கைகளின் போது ஆற்றிய பங்களிப்பையும் உரிமை உணர்வுகளையும் நினைவுகூர்ந்து 27.09.2004 அவரின் இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவையொட்டி ஆதம சாந்திப்பிரார்த்தனையில் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.**

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம்,
லங்கா சிமெந்து லிமிட்டட் கிளை சங்கம்.

(36903)(43-11-18)

## அனுமதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் தரம் ஒன்று, ஐந்து, ஆறு ஆகிய வகுப்புகளுக்கான அனுமதிப் பரீட்சை எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை 9மணிக்கு மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஏனைய வகுப்புக்களுக்கான பரீட்சை தொடர்பான விவரங்களை அறிய விரும்புபவர்கள் கல்லூரி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாமென கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (எ-201)

## வீட்டினுள் வைத்திருந்த நகைகள் மாயம்

கைதடி,செப்.27

வீட்டின் அறையினுள் வைக்கப்பட்டிருந்த பெறுமதிவாய்ந்த நகைகள் மாயமாக மறைந்ததாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று அண்மையில் கைதடி வடக்கில் இடம்பெற்றுள்ளது.

கைதடி வடக்கைச் சேர்ந்த திருமதி பிரதாபன் வதனராணி என்பவரின் வீட்டிலேயே இந்த மாயத் திருட்டு இடம்பெற்றிருக்கின்றது.

கடந்த 17 ஆம் திகதி கொண்டாட்டம் ஒன்றிற்கு சென்றுவிட்டு வந்து தனது நகைகளை சூட்கேஸ் ஒன்றினுள் வைத்தார் என்றும் பின்னர் செவ்வாய்க்கிழமை பார்த்தபோது அங்கு நகைகளைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாலிக்கொடி, சங்கிலி உட்பட இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான நகைகள் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

இத்திருட்டுச் சம்பந்தமாக சாவகச்சேரி பொலீஸாருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (4-75)

## மரண அறிவித்தல்

### திருமதி வரோணிக்கம்மா தாவீது



வயாவிளானைப் பிறப்பிடமாகவும் அந்தோனியார் வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரோணிக்கம்மா தாவீது அவர்கள் 25.09.2004 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி தாவீது (ஓய்வுபெற்ற ஆசிரியர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்) அவர்களின் பாசமிகு மனைவியும் ஆன்ரபேக்கா (இத்தாலி), அன்ரன்குமார் (பிரான்ஸ்), மரினாராணி, ஈடிற்டயானா (திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பேதுரு அந்தோனி-அந்தோனி ஆனாசி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அந்தோனி - யாக்கோவாள் ஆகியோரின் மருமகளும் அருட்பிரகாசம் (இத்தாலி), யூட்மரியரத்தினம் (ஆசிரியர், காவத்தை தமிழ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆன்ஸ்ரன், வாரிசா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற திருமதி மரியம்மா, காலஞ்சென்ற மிக்கேல் மற்றும் பேதுரு, அருட்சகோதரி மேரிசிசிலியா, (செபமாலைத்தாசர் கன்னியர் மடம், அச்சுவேலி), யோசேப் (ஆசிரியர், வீமன்காமம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி பிலுப்பாச்சி யேம்ஸ், காலஞ்சென்ற திருமதி செபமாலை அம்புறோஸ் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஆனம சாந்திக்காக சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று (27.09.2004) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் நல்லடக்கத்திற்காக சுன்னாம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும.

*"ரபேக்கா இல்லம்"*
*புனித அந்தோனியார் வீதி,*
*சுன்னாகம்.*

தகவல்:
தா.அன்ரன்குமார் (மகன்).
(36705)(43-11-18)

# எரிபொருள்களை தலைநகருக்கு எடுத்துவந்து விற்கும் புதிய 'பிஸ்னஸ்'!

## இளைஞருக்கு இப்படியும் வேலைவாய்ப்பு

இன்றைய அரசு வெளிமாவட்டங்களுக்குப் புறம்பாக கொழும்பு மாவட்டத்தில் பெற்றோல், டீசல் என்பவற்றின விலைகளை அதிகரித்த தன் மூலம் வெளிமாவட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது. இது தான் இன்றைய அரசின் 'ரட்ட பெரட' (முன்னேற்றத்தை நோக்கிய திட்டம்) என்று விமர்சனம் செய்கின்றார் முன்னாள் அமைச்சரும் குருநாகல் மாவட்ட ஐ.தே.க எம்பியுமான காமினி ஜயவிக்கிரம பெரேரா.

எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே காமினி ஜயவிக்கிரம பெரேரா இப்படிக் கிண்டல் செய்தார்.

அரசாங்கம் வழமைபோல் நள்ளிரவில் விலை உயர்த்தும் வேலையை ஆரம்பித்துவிட்டது.

அன்றாடம் உயர்ந்துவரும் விலைவாசியினால் இலங்கை பட்டினி சேதமாக மாறப்போகிறது. 1977 ஆம் ஆண்டுக்கு முந்திய யுகம் மீண்டும் ஏற்படப்போகின்றது.

எரிபொருள்களின் விலை உயர்வால் போக்குவரத்து மட்டும் பாதிக்கப்படவில்லை. பாடசாலைகள், வைத்தியசாலைகள், பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை அனைத்துமே பாதிககப்பட்டுள்ளன.

உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பால் நடுத்தர, சாதாரண, அடிமட்ட மக்களின் அன்றாட ஜீவனத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஒருவேளை உணவுக்குப் பிச்சை எடுக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த லட்சணத்தில்தான் 'முன்னேற்றத்தை நோக்கி நாடு' என்ற தனது இயககத்தை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்கின்றது.

வீட்டில் மக்களைப் பட்டினி போட்டுவிட்டு நாட்டை எப்படி முன்னேற்றப்போகின்றனர். கொதித்து எழுந்துள்ள மக்களுக்கு விடைகூற முடியாமல் அரசாங்கம் தடுமாறுகின்றது. என்கின்றார் காமினி ஜயவிக்கிரம பெரேரா.(ஐ-க-6)

# அமைச்சருக்கே தெரியாமல் எரிபொருள் விலை உயர்வா?

## கிண்டலடிக்கின்றது ஐ.தே.கட்சி!

"நள்ளிரவில் எரிபொருள்களின் விலை உயர்த்தப்பட்டமை பொறுப்பான அமைச்சருக்கே தெரியாதாம். விலை அதிகரிக்கப்பட்டதை திறைசேரியிடம் போய்க்கேளுங்கள் என்று அவர் கூறுகின்றார்.

"இப்படிப் பொறுப்பற்ற முறையில் பதில் அளிக்கும் எரிசக்தி, மின்வலு அமைச்சர் சுசில பிரேமஜயந்த உடனடியாகத் தனது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும்." எனக கோருகின்றது ஐக்கிய தேசியக்கட்சி. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் கையாலாகத் தனத்தை இப்படிச் சாடுகினறார் ஐ.தே.க. சிரேஷ்ட உறுப்பினரான காமினி ஜயவிக்கரம பெரேரா எம்.பி.

இந்த அரசாங்கமும் அரசின் பங்காளிகளான ஜே.வி.பியினரும், பொதுமக்கள் மீது மேலும் சுமை ஏற்றப்படமாட்டாது, உணவுப் பொருள்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது, எரிபொருள்களின் விலை உயர இடமளிக்கமாட்டோம் என்றெல்லாம் கூறுகின்றனர்.

பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் இருந்து அரிசியை இறக்குமதி செய்து சாதாரண விலையில் பொதுமக்களுக்கு வழங்குவோம் என்றும் தம்பட்டம் அடிக்கின்றனர்.

ஆனால், இவர்களுக்குத் தெரியாமல் திறைசேரி எரிபொருள்களின் விலையை அதிகரித்துவிட்டது.

இதனால், தனியார் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இன்னும் சில தினங்களில் நாடாளாவிய ரீதியில் வேலைநிறுத்தம் ஒன்றும் நடைபெறவுள்ளது. போக்குவரத்துத் தடைப்பட்டால் நாட்டின் சகல இயக்கங்களும் ஸ்தம்பிதப்படும். அதற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கமும் அமைச்சரவையுமே ஏற்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருக்கும் போது ஈராக் யுத்தம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அப்போதும் கூட நாம் சுமைகளை ஏற்றுக் கொண்டு பொதுமக்களுக்கு மானிய விலையிலேயே எரிபொருள்களை வழங்கினோம்.

ஆனால், இன்றைய அரசு பொதுமக்களை வறுமையின் எல்லைக்கோட்டுக்கு அப்பால் கொண்டு செல்கின்றது.

இதற்கான ஐக்கிய தேசியக் கட்சி போராட்டம் நடத்தவேண்டிய அவசியம் இல்லை. பொது மக்களே கூடிய விரைவில் அரசுக்குப் பாடம் படிப்பிப்பார்கள் என எச்சரிக்கை விடுத்தார் முன்னாள் அமைச்சரான காமினி ஜயவிக் கிரம சிங்க பெரேரா. (ஐ)

# அமைதி முயற்சிகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றுவதற்காக அமெரிக்கா சென்ற ஜனாதிபதி குமாரதுங்க வழியில் பிரிட்டனில் தங்கிச் சென்றார். அதற்கு முன்னரும் அண்மையில் பிரிட்டனுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை அவர் மேற்கொண்டார்.

இந்த விஜயங்களின்போது பல்வேறு உலகத் தலைவர்களை அவர் சந்திக்காவிட்டாலும் அவரும் அவரது அரசைச் சேர்ந்தோரும் பல நாடுகளிலும் முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தில் உள்ள பல்வேறு உயர் மட்டத்தினரைச் சந்தித்து விரிவாகப் பேச்சு நடத்தினர்.

ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத் தொடர் மற்றும் அதையொட்டிய பல்வேறு நிகழ்வுகள் பத்திரிகையாளர் மாநாடுகள் ஆகியவற்றின் பின்னர் இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சிகள் தொடர்பாக தனனுடையதும் தன்னுடைய அரசினதும் நிலைப்பாட்டுக்கு அதீத வரவேற்பு கிடைத்திருப்பதாக ஜனாதிபதி குமாரதுங்க கருதுகின்றார். இதனால் அவர் அதிகம் உற்சாகமடைந்துள்ளார்.

- இப்படி முக்கிய இராஜதந்திர வட்டாரங்கள் கணிப்பீடு செய்திருக்கின்றன.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதில் அதிகம் நாட்டம் காட்டிவரும் ஒரு நாட்டின் இராஜதந்திர வட்டாரங்கள், ஜனாதிபதி குமாரதுங்கவின் நிலைப்பாட்டை இவ்வாறு கணிப்பீடு செய்து அதனை உயர்மட்டத்தில விடுதலைப் புலிகளுக்கு தெரியப்படுத்தி இருக்கின்றன என்று நம்பகமான அறியவருகின்றது.

எனவே, எதிர்வரும் காலங்களில் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற சிங்களத் தீவிரப் போக்குக் கட்சிகளின் தாளத்துக்கு ஆடுபவராகவே ஜனாதிபதி இருப்பார் என்றும் -

அமைதி முயற்சிகளில் விட்டுக்கொடுப்பும், தளர்வுப் போக்கும் ஜனாதிபதி குமாரதுங்கவை பொறுத்தவரை இனிமேல் வெளிப்பேச்சிலும் வார்த்தையிலும் இருக்குமே தவிர செயலில் இருக்கும் என எதிர்பார்க்கவேண்டாம் என்றும்-

அந்த வட்டாரங்கள் புலிகளின் தலைமைக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றனவாம்.

அமைதி முயற்சிகளில் தனது அரசியல் நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் முற்றாக ஏற்று அங்கீகரித்திருக்கின்றது என்பதில் ஜனாதிபதி இப்போது முழுத் திருப்தியடைந்திருக்கிறார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-க)

# கண்ணீரில் சில துளிகள்

மண்ணுலகில் 27 05 1976



விண்ணுலகில் 25 09 2004

அமரர் **கௌரி மனோகரன் சுதாகரன்**

எமது பணிமனையில் கடமையாற்றும் திருமதி யோ.கிருசாந்தி அவர்களின் அன்புத் தம்பியார் சுதாகரன் அவர்களின் திடீர் மறைவினால் ஆழ்ந்த துயர் அடைவதுடன், அன்னாரின் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-37862)
(32-13-18)

நலன்புரிச் சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை.

**தேவை**
தையல் தெரிந்த பெண் ஒருவர் தேவை.
தொடர்பு: 214, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(36906) T.P. No: 0776013624

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
அர்ஜுன, லாராதத், ரகுவரன், விவேக் நடித்த
அரசாட்சி

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30 (36364)(12)

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடிப்பில்
மதுர
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)


**நிரஞ்சனாஸ்** சங்கானை
தனுஷ், சிந்துதுலானி, கருணாஸ், மணிவண்ணன் நடிப்பில்
சுள்ளான் (ரீகல்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு
Return To Tow Moon Junction (இரவு 8.45 பு.நே)


# தமிழர் தாயகம் எங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்வலம் நல்லூர் வடக்கில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்தை அடைந்தது.

அங்கு அமைக்கப்பட்ட திலீபன் நினைவுப் பந்தலில் பொதுச் சுடரினை கட்டன் றொசானின் தாயார், பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில், யாழ். கல்வியியற் கல்லூரி மாணவன் சுதன், சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் யாழ். மாவட்ட வெண்மை வாணிபச் சங்கத் தலைவர் எஸ்.பால்ராஜ் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியை யாழ். நல்லூர் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூமகள் ஏற்றினார். தொடர்ந்து நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டன.

மலர் மாலைகளை யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம், தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளா ப.கனகலிங்கம் ஆகியோர் அணிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து திலீபன் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த இடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நினைவுக் கல்லை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி திரைநீக்கம் செய்துவைத்தார்.

இவற்றை அடுத்து உண்ணாவிரதத்தினை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆரம்பித்து வைத்தார். நினைவுரைகள், கவிதாஞ்சலி என்பன தொடர்ந்து இடம்பெற்றன. அரங்க நிகழ்வுகள் சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் பி.பகீதரன் தலைமையில் நடைபெற்றன. திலீபன் உயிர்நீத்த நேரமான முற்பகல் 10.48 மணிக்கு அனைவரும் எழுந்துநின்று அகவணக்கம் செலுத்தினர். தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன. ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், அருட்தந்தை ஜெயசேகரம் அடிகளார், மௌலவி இர்மா, அருணாசலம் அடிகளார், இராமேஸ்வரக் குருக்கள் ஆகியோர் வழங்கினர்.

அஞ்சலி உரையினை நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன், மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.குணேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். நிகழ்வின் சிறப்புரையினை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நிகழ்த்தினார். தொடர்ந்து மாணவர்களின் கவிதைகள், நடனம் என்பன இடம்பெற்றன.

பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செம்மணன் நீராகாரம் வழங்கி உண்ணாநோன்பை நிறைவு செய்தார். இந்நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.

### தென்மராட்சியில்

புத்தூர் சந்தியில் இருந்து பாண்ட் வாத்திய இசை முழங்க அணிவகுப்பு நகர்ந்து வர பொது மக்கள் பின்தொடர பேரணி சங்கத்தானை முருகமூர்த்தி கோயில் முன்றிலில் அமைக்கப்பட்டிருந்த நினைவுப் பந்தலை வந்தடைந்தது. பொதுச்சுடர், தேசியக் கொடி, ஈகச்சுடர் என்பன ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.சந்திரசேகரா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் அருந்தவபாலன் உண்ணாநோன்பைத் தொடக்கி உரையாற்றினார்.

வீரச்சாவடைந்த நேரமான முற்பகல் 10.48 மணிக்கு மணி ஒலித்து மலர் வணக்கம் செய்யப்பட்டது.

சிறப்புரையினை யாழ். மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினரும் பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளருமான இளம்பிறை, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர் கிருஷ்ணா, விஞ்ஞானக் கல்லூரி மாணவன் பிரசன்னா, பங்குத் தந்தை இரவிச்சந் திரன் அடிகளார் ஆகியோர் ஆற்றினர்.

### வடமராட்சியில்

திலீபனின் அடையாள உண்ணாவிரத நிகழ்வு அல்வாய் வடக்கு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோயில் முன்றிலில் கரவெட்டி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.தர்மலிங்கம் தலைமயில் நடைபெற்றது.

பொதுச் சுடரினை யாழ். மாவட்ட அரசியல துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் பலர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியினை வடமராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றிவைத்தார்.

மலர் வணக்கத்தைத் தொடர்ந்து கலைவிழி தொடக்கவுரை நிகழ்த்தினார். நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார், க. சிவாஜிலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிறைவுரையை யாழ். மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆர்வலன் ஆற்றினார். பாடசாலை மாணவர்களின் கவிதை, நடனம் இசை நிகழ்வு என்பன இடம்பெற்றன.

உடுப்பிட்டி, நாவலடி மேற்கு இமையாணன் முன்பள்ளி அருகில் தியாகி திலீபனின் நினைவுக் கல் திரைநீக்கம் செய்து வைக்கப் பட்டது. நினைவுக் கல்லினை வடமராட்சிக் கோட்ட மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் தமிழரசன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

### தீவகத்தில்

புளியங்கூடல் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முன்றிலில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ்மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை யாழ். மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் ச.அருணன் ஏற்றிவைத்தார். திலீபனின் திருவுருவப் படத்திற்கு ஊர்காவற்றுறை பிரதேசப் பொறுப்பாளர் ரதன் ஈகச்சுடரேற்றி மலை அணிவித்தார்.

தீவகக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் த.சத்தியதாசன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. 10.48 மணிக்கு மணி ஒலித்து மலர்வணக்கம் செலுத்தப்பட்டது.

சிறப்புரையினை தேசிய எழுச்சிப் பேரவை ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன், சர்வதேச மாணவர் பேரவை உறுப்பினர் குகன் ஆகியோர் ஆற்றினர். இரவு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

காரைநகரில் பிரதேச செயலாளர் வே.சிற்சபேசன் தலைமையில நிகழ்வு இடம்பெற்றது. தேசியக் கொடியினை காரைநகர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கானகன் ஏற்றிவைத்தார். இரவு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

### நெடுந்தீவில்

நெடுந்தீவு பிரதேச சபை பொது மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு நெடுந்தீவுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.கணேசலிங்கம் தலைமை வகித்தார்.

முன்னதான கடற்கரையோரமாக அமைந்துள்ள திலீபன் நினைவுத் தூபியில் இருந்து பாண்ட் வாத்திய சகிதம் திலீபனின் திருவுருவப்படம் நிகழ்விடத்திற்கு எடுத்துவரப்பட்டது.

பொதுச்சுடரினை போராளி அஜந்தன் ஏற்றினார். தேசியக் கொடியினை நெடுந்தீவுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன் ஏற்றினார்.

மலர்மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மலரஞ்சலியும் இடம்பெற்றது. சிறப்புரைகளை ரங்கன், சி.அந்தோனிப்பிள்ளை ஆகியோர் ஆற்றினர். கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-4-5-6-7-13-31-70-112-117-182-95-173)

# மரண அறிவித்தல்

## வீரசிங்கம் குமாரலிங்கம்



இணுவில் மேற்கு, பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த வீரசிங்கம் குமாரலிங்கம் (ஓய்வுபெற்ற மின்சாரசபை உத்தி யோகத்தர்) 24.09.2004 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பையா - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் திருமதி பாக்கியலக்ஷ்மியின் அன்புக் கணவரும், தவத்தழகன் (லண்டன்), திருமதி கிருஸ்ணகுமாரி அசோகன் (சுவிஸ்), காலஞ்சென்ற ஆதித்தன் மற்றும் நிமலன் (லண்டன்), பாலகுமாரி, அனுஷா, கயனி (மாணவிகள், இணுவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தகப்பனும் திருமதி தமிழ்ச்செல்வி (லண்டன்), அசோகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சானுஷன், ஆருஷன், டிலக்ஷன், வியாசன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்ற திருமதி சாரதாதேவி சண்முகசுந்தரம், நாகேஸ்வரி மற்றும் கணேசமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சண்முகசுந்தரம் (மல்லாகம்-தபாலக உத்தியோகத்தர்) மற்றும் திருமதி கலா (லண்டன்), திருமதி சிவபாக்கியம் - இராசையா, செல்வி அன்னலக்ஷ்மி (சின்னக்கிளி) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சுப்பையா, அம்பலவாணர், இலங்கநாதன் ஆகியோரின் பெறாமகனும் திருமதி சரஸ்வதி ஆறுமுகம் (ஆசிரியர்) ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற இராசையாவின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2004) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணிக்கு தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில்*
*பரராஜசேகரப் பிள்ளையார்*
*கோயிலடி, இணுவில்*
*T.P.: 4590787* (36907)(32-13-18)

தகவல்:
சு.ஸ்ரீராமச்சந்திரன்
(சகோதரன்),
நாதன் பிறதேர்ஸ், இணுவில்.



நல்லூரில் தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு சிறுவன் ஒருவன் மலர் அஞ்சலி செலுத்திய காட்சி.

# கடவுச் சீட்டுகளில் இனி கைரேகை

கடவுச்சீட்டுக்களில் அதன் உரிமையாளரின் பெருவிரல் ரேகை அடையாளங்கள் பதியப்படவுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

கடவுச் சீட்டுக்கள் அதிக அளவில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை அடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அரசாங்கத்தின் அனுமதியுடன் இந்தப் புதிய முறை நடைமுறைக்கு வரவுள்ளது. அதிநவீன தொழில்நுட்ப முறையில் சாதாரண கண்களுக்கு தெரியாத வகையில் இப்பெருவிரல் ரேகை பதிவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை அரசுக்கும் பெரும் வருவாயைத் தந்த ஒரேநாளில் கடவுச்சீட்டு வழங்கும் முறை மாற்றப்பட்டுள்ளது. 3 நாள்களில் வழங்கும் புதியமுறை நடைமுறைக்கு வந்துள்ளது.

# சமாதானப் பேச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசினர். கூட்டமைப்பின் சர்வதேச விவகாரங்களுக்கான நாடாளுமன்ற உறுப்பினர் குழுவைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜோசப் பரராஜசிங்கம், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க சுவிற்ஸர்லாந்து நாடு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என்றும் தமிழ் எம்.பிக்கள் தூதுவரிடம் கோரினர்.

கிழக்கில் நடக்கும் வன்முறைகளுக்காக சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகள் மீது மட்டும் குற்றஞ்சாட்டக்கூடாது. அது சமாதான முயற்சிகளில் ஆக்கபூர்வமானதாக அமையாது. சர்வதேச சமூகம் நடுநிலையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று தாம் தூதுவருக்கு விளக்கமளித்தனர் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவித்தார். இராணுவம் துணைப்படையினருக்கு வழங்கிவரும் ஆதரவே தற்போதைய வன்முறைகளுக்கான காரணம் என்றும் எம்.பிமார் குறிப்பிட்டனர். (ஐ-க-4-6)

## மாணவர்களுக்கு!

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காக உதயனில் வெளியாகிவரும் மாதிரி வினாத் தாள்களில் நாளை (28.09.2004) தமிழ் மொழியும் இலக்கியமும் (பகுதி I,II) வினாத்தாள்கள் வெளிவரவுள்ளது. உங்கள் பிரதியை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# முதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக ஜனாதிபதி அமைக்க உத்தேசித்துள்ள தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலில் கலந்துகொள்ளுமாறு எதிர்கட்சித் தலைவருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார் ஜனாதிபதி. இதற்கான பதில் கடிதத்திலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எழுதியுள்ள பதில் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகள் இடைக்காலக் கட்டமைப்புத் தொடர்பில் முன்மொழிவை எமக்குச் சமர்ப்பித்துள்ளனர்.

ஐக்கிய இலங்கைக்குள்ளான சமஷ்டிக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டது. புலிகளின் முன்மொழிவு. இன்னும் இது தொடர்பில் முடிவுகள் எட்டப்படவில்லை. இது தொடர்பாகப் புலிகளுடன் அரசு பேசவேண்டும்.

எமது கட்சியின் நிலைப்பாடும் நேரடியாகப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்கவேண்டும் என்பதுதான். எனவே தான் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் புலிகளுடன் பேசுமாறு உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

சமாதானம், நல்லிணக்கம் என்பவற்றுக்கான தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் இப்போது காலப்பொருத்தமற்றது.

- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இறுதி ஆட்டங்கள்

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் பெண்கள் அணிகளுக்கிடையிலான கரபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. இறுதிப் போட்டிகளில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

**15 வயது பிரிவு**

கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், எதிர் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**

சாவகச்சேரி இந்துக்கல்லூரி எதிர், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் எதிர் வரணி மகாவித்தியாலயம்.

மூன்று பிரிவுகளிலும் மூன்றாம் இடங்களுக்கான போட்டிகளும் அன்றைய தினம் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - வலய மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் எதிர்வரும் முதலாம் திகதி கொடிகாமம் அரசினர் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (5-117)


## வாடிக்கையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

லிங்கன் கிறீம் ஹவுஸ் 119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு எவ்வித கிளைகளும் கிடையாது. எனவே, சில போலிகள் எமது ஸ்தாபனத்தின் பெயரைப் பயன்படுத்தி தரக்குறைவான பொருளை விநியோகித்து வருகின்றார்கள். ஆதலால், இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளர்,
லிங்கன் கிறீம் ஹவுஸ்
(சி-37843)(32-13-17-30)

## BRIGHTEN INSTITUTE

சங்கத்தானை
பொருளியல்
K.உதயன்
பகுதி II
"பணமும் வங்கியும்"
பகுதி I
வினா - விடை
Mon.,Tue.
3.30 -5.30
(36888)

## உயிர் காக்க உடனடியாகத் தொடர்புகொள்ளவும்

இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்த நிலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒருவருக்கு உடனடியாக சிறுநீரகம் ஒன்று மாற்றவேண்டியுள்ளதால் அவருக்கு மனிதாபிமான அடிப்படையில் சிறுநீரகம் கொடுத்து உதவ விரும்புபவர்கள் (O+Blood Group உடையவர்கள்) உடனடியாகத் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :
T.P.: 2508584, 4590208 (யாழ்ப்பாணம்)
(சி-37864)(30-13-17)

## BIOLOGY EXAM

★ அலகு ரீதியான 5 Hours Exam
★ ஒவ்வொரு POYA தினங்களிலும் நடைபெறும்.
★ 8 அலகுகளிற்கும் நடைபெறும்
★ புள்ளியிடல் திட்டம் வழங்கப்படும்
★ முதல் அலகுக்கான EXAM
ஆரம்பம்: 28.09.2004 செவ்வாய்.

பரீட்சகர்: அல்போன்ஸ்
NEW SCIENCE CENTRE
யாழ்நகர். (சி-37852)(30)

## CATWAS. COM
Computer Academy

No.26, Somasundram Avenue, Chundukuli. T.P.:021-2223805

1. Online Diploma in Microsoft Office.
Duration - 01 Month - 100 Hours
01. 10. 2004ஆம் திகதியில் இருந்து 31. 10. 2004 வரை.
2. Diploma in Hardware.
Duration < 02 Weeks / 01 Month > 50 Hours
01. 10. 2004ஆம் திகதியில் இருந்து 15. 10. 2004 வரை
01. 10. 2004ஆம் திகதியில் இருந்து 01. 11. 2004 வரை (சி-37828)(30-13-17)

பல்கலைக்கழக புகுமுகமாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும், நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கும், தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களுக்கும், ஏனைய மாணவர்களுக்குமான விரிவுரைகளும், செய்முறை பயிற்சிகளும் உங்கள் வசதிக்கு ஏற்ப ஒழுங்கு செய்துதரப்படும்.

3. Microsoft Kids Program. Duration - 06 Months

## தொழிற் பயிற்சிகள்

வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவாறு பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

★ RADIO, T.V, VIDEO DECK REPAIRING சகல இன றேடியோ, ரீவி, டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, UPS, Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். *(காலம் 10 மாதங்கள்)*

★ MOTOR REWINDING AND ELECTRICAL WIRING சகல இன மோட்டார், (F) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு SINGLE PHASE, THREE PHASE இணைப்புமுறை என்பன பயிற்சி அளிக்கப்படும். *(காலம் 7 மாதங்கள்)*

★ AIR CONDITIONING and REFRIGERATION சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். *(காலம் 7 மாதங்கள்)*

★ MOTOR CYCLE, WATER PUMP MECHANISAM சகல இன மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும்முறை என்பன ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)

DIPLOMA IN ELECTRICAL & ELECTRONIC TECHNOLOGY *(காலம் 12 மாதங்கள்)*

புதிய பயிற்சிகள் ஆரம்பம்
01.10.2004 (கிழமை நாள்களில்)
03.10.2004 (சனி, ஞாயிறு நாள்களில்)
தனிப்பட்ட வகுப்புகள் நடைபெறுகின்றன.

மேலதிக விவரங்களுக்கு:
Jaffna Technical Institute
இலக்கம் 07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3335, 077 3086716
(36740)(13-17-30)

## வடமராட்சி மாணவர்களுக்கு!

புதிய பிரிவுகள் :02/10/2004 ,10.00 A.M

I I S

Diploma in Computer Programming
Diploma in Internet Technology
Diploma in Hardware Technology
Diploma in Desk Top Publishing
Online Classes
Diploma in Micro Soft Office

பதிவுகளை மேற்கொள்ளவேண்டிய இறுதிநாள் - 30-09-2004

Institute of Informatics Studies
Nelliyady, Karaveddy
Tp.No.:2263335

## வேலை வாய்ப்பு

- கணனித் தட்டெழுத்தாளர் (Computer Typist)
- கட்டுநர் (Binder)
- எழுதுநர் (Clerk)

ஆகிய பதவிகளில் இணைய விரும்புபவர்கள் உரிய சான்றிதழ்களுடன் **28-09-2004** செவ்வாய் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை நடைபெறும் நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளலாம்.

சுந்தர் வெளியீடு
844,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021 222 7086

## புதிய கணனிக் கற்கைநெறிகள்

Diploma In Ms Office 2003
Diploma In Computer Hardware
Diploma In Web Designing
Diploma In Desk Top Publishing
Diploma In Computer Programming

புதிவுகளை 01.10.2004 முன் மேற்கொள்ளவும்

மேலதிக விபரங்களுக்கு

Jaffna Technical Institute
No. 07, PalalyRoad, Jaffna
T.P. 021-222-3335
0773086716


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.